# சத்திய வேத பாதுகாவலன்

Telegram: "CATHOLIC PRESS", JAFFNA. — 1876-ம் வருஷம் ஆரம்பிக்கப்பட்டது — Telephone: No. 300.

REGISTERED AT THE CEYLON G. P. O. AS A NEWSPAPER.

"கர்த்தர் நகரத்தைக் காக்காவிட்டால் அதைக் காக்கிறவன் கண்விழிப்பது வியர்த்தம்"

83-ம் புத்தகம் | யாழ்ப்பாணம் 1958-ம் ஆண்டு ஆவணி மாதம் 14-ந் திகதி வியாழக்கிழமை — பிரதிசதம் 10 | 31-ம் இலக்கம்


## மோட்சாரோபண மாதா

பரிசுத்த தேவதாயார் பரலோகத்துக்கு ஆரோபணமான திருநாள் வருகின்றது. தேவதாயாரின் பிள்ளைகளெல்லாம் இந்தத்திருநாளை ஆவலோடுஎதிர்பார்த்து அந்தநாளிலேஅவர் பரலோகத்துக்கு எழுந்தருளியதையும், அங்கே பரலோக பூலோக இராக்கினியாகத் திருமுடிசூட்டப்பெற்றதையும் தங்கள் ஞானக்கண்களால் உற்றுப்பார்த்து, ஆனந்தபூரிதராய்த் தங்கள் அன்பானதாயார், அடைக்கலத்தாயார், மோட்சதாயார், இராக்கினிகளுக்கெல்லாம் பரமஇராக்கினியான தாயாரென்று அவரைப்பாவாலும், நாவாலும்புகழ்ந்து கொண்டாடவும், அவருக்குத் தங்கள்வந்தனைநமஸ்காரங்களைச் சமர்ப்பிக்கவும் ஆயத்தப்படுகின்றார்கள். தேவதாயார் பரலோகத்துக்கு ஆரோபணமாண திருநாள் பரலோகமும் பூலோகமும் அக்களித்தஓர்பெருநாள். பரலோகவாசிகளும், பூலோகவாசிகளும் ஒருங்கே சந்துஷ்டிகொண்ட ஓர்சுபநாள். இந்தநாள் தேவதாயாரின்மகத்துவத்தைப் பிரஸ்தாபப்படுத்தும் சகலதிருநாட்களிலும் மிகமகத்துவம்பெற்ற ஒருநாள். ஓர்இராக்கினிக்குத் தன்சீவியகாலத்திலே தான்சிம்மாசனமேறி இராசமுடிசூடிய நாள் ஒருமகாநாளாயிருப்பின், பரலோகபூலோக இராக்கினியான தேவதாயார் நித்தியகாலமாய்ச் சருவேசுரன் தமக்குமுஸ்திப்புச்செய்திருந்த சிங்காசனத்தெழுந்தருளித் திருமுடிசூடிய நாள் எவ்வளவோமகத்துவம் பொருந்தியதாகுமன்றோ!

தேவதாயார் பாவமாசு ஒருசிறிதும் அணுகாதவரானபடியால், அவர்மரணம் ஏனையமனுஷருக்குப்போலப் பாவத்தின் தண்டனையாகிய யாதேனும் வியாதியினாலே வந்ததல்ல. அவருடைய உள்ளத்தில் தணியாது எரிந்துகொண்டிருந்த தேவநேசாக்கினிச் சுவாலையே அவரின் மரணத்திற்குக் காரணமென்று சொல்லவேண்டும். தமதுதிருக்குமாரன் பரலோகத்துக்கு எழுந்தருளியநாள்தொட்டு எப்போது அவரைக்காண்பேனோவென்ற ஆசைப்பெருக்கத்தினால் அவர் இருதயமானது தேங்கிக்கொண்டேயிருந்தது. இவ்வித ஆசைமேலீட்டினாலே நம்முடைய தாயாரின் பரிசுத்த ஆத்தும சரீரபந்தனங்களை அறுத்துவிட்டுத்தமது திவ்வியசுதன் இருக்குமிடத்திற்குத் தீவிரித்துப்பறந்துபோயிற்று. அவரின் திருச்சரீரத்தையோ ஏனைய மனுஷரின் சரீரங்களைப்போல அழிவுக்குட்படுத்தச் சருவேசுரன் சித்தங்கொள்ளவில்லை. "நீ தூசியாயிருக்கிறாய், திரும்பவும் தூசியாய்ப் போவாய்" என்று பாவத்தினிமித்தம் சகலமனுஷருக்கும் சருவேசுரன் இட்டதண்டனையானது தேவதாயாருக்குச் செல்லாது. ஆதலால், அவரின் சரீரத்தைச் சருவேசுரன் உயிர்ப்பித்து அட்சயம், இலகு, சூட்சம், பிரகாசம் என்னும் இலட்சணங்களுடையதாகச் செய்து சம்மனசுகள் சூழ்ந்து கீதம்பாட, தீர்க்கதரிசிகளும், பிதாப்பிதாக்களும் வாழ்த்த, ஆனந்தஆர்ப்பரிப்புடன் மோட்சத்துக்கு எழுந்தருளுவித்து, அவரைப் பரலோகபூலோக இராக்கினியாக முடிசூட்டியருளினார்.

தன்னைத்தாழ்த்துகிறவன் உயர்த்தப்படுவான் என்ற தேவவாக்கானது, பரிசுத்ததேவதாயாரில் இத்தினத்திலே முற்றாய் நிறைவேறியது. இப்பூலோகத்திலே இருக்குமட்டும் அவர் தம்மை அதிகமாய்த் தாழ்த்திக்கொண்டு வந்தாராகவே, சருவேசுரன் தமதுகுமாரத்தியாரின் தாழ்மையைக்கண்டு இப்போது "சகலதலைமுறைகளும் அவரைப் பாக்கியவதி" யென்று சொல்லும்படியாக உயர்த்திவிட்டார். தேவதாயாரின் இந்தஆரோபணமானது நமக்கும் ஒருநாள் கிடைப்பதாகும் ஆரோபணத்திற்குக் குறிப்பாகவிருக்கின்றது. அவரைப்போலும் மோட்சத்திலிருந்து அரசாளவிரும்பினால், அவர்எவ்வளவாகத் தம்மைத்தாழ்த்திநடந்தாரோ அவ்வளவாகநாமும் நம்மைத்தாழ்த்திநடக்கப் பிரயாசப்படவேண்டும். அவர் தமதுசரீரத்துடன் மோட்சத்துள்பிரவேசிக்குமுன் ஆசையினாலும், நேசப்பற்றுதல்களினாலும் எப்படிஅங்குசென்று, அந்தஇராச்சியத்தைச் சுதந்தரித்துக் கொள்வோருக்கிணங்கச் சீவித்தாரோ, அப்படியே நாமும் மனதினால்அங்குசென்று அந்தமோட்சநகருக்கு ஏற்றவர்களாக நடந்துகொள்ளவேண்டும். இந்தஉலகம் நிலையற்றதென்றும், நாம்பரதேசிகளேயென்றும், எமது சுயதேசம் நித்தியமோட்சமேயென்றும் உணர்ந்துகொள்ளவேண்டும். இவ்விதமாகவே அதிபிதாக்களும் இவ்வுலகத்தில் தாங்கள் பிரயாணிகளென்பதை உணர்ந்துமேலுகமொன்றைத் தேடுவோராகச் சீவித்துவந்தார்கள். இவ்வாறேதாவீதென்பவரும் சருவேசுரனை எப்போதுகாண்பேன், எப்போதுஅவர்வல்லபத்தைக் கண்டுகளிகூருவேன் என்று பெருமூச்சுவிட்டுவந்தார். நாமும் உலகசுகசெல்வங்களில் மிதமிஞ்சியகவலைவையாது மோட்சத்தைத் தியானித்துச் சீவிப்போமேயாகில் தேவதாயார் அடைந்தபாக்கியம் நமக்கும் ஒருநாள் கிடைக்குமென்பதிற் சந்தேகமில்லை.

## தெரேசா நியூமன் —
## திருக்காய வரம்பெற்ற மாது

கடந்த பெரியவெள்ளிக்கிழமையன்று ஆயிரக்கணக்கானமக்கள் கொன்னேர்ஸ்றாத்என்ற பவேரியகிராமத்தைத் தரிசித்து, நமதுதிவ்வியஇரட்சகர் சிலுவையில்அறையுண்டு தொங்கியபோது தமதுகரங்களிலும், பாதங்களிலும், விலாவிலும் கொண்டிருந்த திருக்காயங்களைத் தனதுஉடலிலும் கொண்டு ஐந்துகாயவரத்தியென அறியப்படுகின்ற தெரேசா நியூமன் எனும்மாது திவ்வியகர்த்தர் அனுபவித்த திருப்பாடுகளைப்பட்டு வேதனைப்படுவதைக் கண்ணாரக் கண்டுகொள்ளுமாறு 'கியூ' வரிசையிலே காத்துநின்றார்களெனப்பத்திரிகைச்செய்திகள் வெளிவரலாயின.

### உணவின்றி உயிர்வாழ்கின்றாள்

தெரேசாநியூமனைப் பற்றிய அற்புதசம்பவம் உலகெங்குமே பெரும்அருட்சியை உண்டுபண்ணியிருக்கிறது. 1922-ம் ஆண்டின் நத்தால்பண்டிகையிலிருந்து அவள் திரவபதார்த்தமே—அதாவது நீர்ப்பதார்த்தமே போசனமாக உட்கொண்டுவந்தாளென்றும், 1926-ம்ஆண்டிலிருந்து திவ்வியநற்கருணையை உட்செலுத்துமாறு ஒரேயொரு கரண்டி தண்ணீர்மாத்திரமே அருந்திவந்தாளென்றும், ஆனல், 1927-ம்ஆண்டிலிருந்து அஃதுதானும் அருந்தியபாடில்லையென்றும் நிச்சயித்துக்கூறப்படுகிறது. இந்தஅற்புதநிகழ்ச்சிகளின்விபரங்கள்பற்றியகட்டுரை ஒன்றைத் தமதுநெடுநாள் ஆராய்ச்சியையும், அவைகள் பற்றிக் "கொன்னேர்ஸ்றாத் பற்றிய உண்மை" எனும்நாமத்துடன் அதிகம்சமீபகாலத்தில் வெளிவந்த புத்தகம்ஒன்றில் கண்டவைகளையும் ஆதாரமாகக்கொண்டு யேசுசபையைச் சேர்ந்த வண. டபிள்யு கோனிக் சுவாமியார் எழுதியிருக்கின்றார். அதன்சுருக்கம் வருமாறு:

### முப்பதுவருட அற்புதநிகழ்ச்சிகள்

"கொன்னேர்ஸ்றாத் பற்றிய உண்மை" என்ற நாமத்தைக் கொண்ட இந்தப்புத்தகம் செல்விலூய்சா றின்சர் என்ற பேர்பெற்ற ஓர்பவேரிய நூலாசிரியையால் எழுதப்பட்டதாகும். இவள் மனேதத்துவசாஸ்திரத்திலும், கல்விசம்பந்தமான விஞ்ஞானசாஸ்திரத்திலும் பட்டங்கள்பெற்றவள். மகளிர்கல்லூரி ஒன்றிலே ஆசிரியையாயிருந்தவள். அவள்எழுதிய இந்தப்புத்தகமானது, முப்பதுவருடங்களுக்குமேல்நிச்சயித்துக்கொள்ள முடியாது உலகத்தைச் சந்தேகத்தில் ஆழ்த்திவந்த சுபாவத்திற்குமேலான இந்தஅற்புதநிகழ்ச்சிகளின் வரலாற்றை இனிதேதெளிவித்து நன்குஎழுதப்பட்டிருக்கிறது. தெரேசாநியூமனுடனும், அவளுடைய பாரியகுடும்பத்துடனும் நெருங்கிப்பழகிய அறிமுகத்தை ஆதாரமாகக்கொண்டு எழுதப்பட்ட இந்தப்புத்தகம் அதிகம்சமீபகாலமனேதத்துவஆராய்ச்சிமுடிபுகளைச் சிந்தனைக்குக்கொணர்ந்துள்ளது.

### தெரேசாவும் அவள்கிராமமும்

கொன்னேர்ஸ்றாத் என்பது இயற்கைவளம்பொருந்திய ஓர் சிறியகிராமம். சிற்பவேலைப்பாடுகளைக்கொண்ட அதன்புராதன ஆலயத்தைப்புடைசூழ்ந்திருக்கும் மூக்கோணசரிவான பழையமனைகளுடனும், சுத்தமான வீதிகளுடனும், சன்னல்கள்தோறும் சுகந்தமலர்கள், பசுந்தளிர்களுடனும்கூடிய சிறியதோர் மணிநகர்போன்று அதுகாட்சியளிக்கின்றது. 1928-ம்ஆண்டின் புரட்டாசி மாதத்திலே இந்தக்கிராமத்தையும், தெரேசாநியூமனையும்கண்டு

(தொடர்ச்சி 4-ம் பக்கம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பல தேசங்களில்

### ஜேர்மனியும் அகதிகள்முகாமும்

சுதந்திர மேற்கு ஜேர்மனியிலே நான்குலட்சம் மக்களைக்கொண்ட 3,000 அகதிகள் முகாங்கள் இன்னுமே இருந்துவருகின்றன; கம்யூனிஸ்த கிழக்குஜேர்மனியிலிருந்து எல்லைதாண்டி 500முதல் 600பேர்வரை அங்கு தினமும் சென்றுகொண்டிருக்கின்ற புதிய அகதிகளுக்கென்று புதியமுகாம்கள் திறக்கப்பட்டுவருகின்றன. சென்ற வருடத்தில் சோவியற்அரசின் ஆதிக்கத்திலுள்ளகிழக்குஜேர்மனியிலிருந்து மாத்திரம் 25,000 பேருக்கு மேற்பட்ட மக்கள் தப்பியோடி அங்குசரணடைந்திருக்கின்றார்கள். இத்தொகை 1956-ம்ஆண்டு நிகழ்ந்த சுதந்திரஅரசியற்புரட்சிக் கலகத்திற்பின்னர் சுதந்திரத்தைவேண்டிச் சுவநாட்டிலிருந்து தப்பியோடிய ஹங்கேரியர்களின் மொத்தத்தொகையிலும் கூடியதாகும். அங்கு பிறீட்லான்ட் எனுமிடத்திலுள்ள பெரியமுகாமே தினமும் சென்று சரணடைகின்ற இந்தநிர்ப்பாக்கிய ஜேர்மன்அகதிகளை வரவேற்பதில் பிரசித்திபெற்றது. அவர்கள் கூட்டமாக வரும்போதெல்லாம் அவ்விடத்திலுள்ள கத்தோலிக்க கோவில்மணிகளும், புரொட்டஸ்தாந்த கோவில்மணிகளும் அடித்துஆர்ப்பரித்து அவர்களை வரவேற்கின்றன. அவர்களுக்குச் சாந்தியளிக்குமுகமாகவே இவ்விரு கோவில்களும் விசேஷவிதமாய்க் கட்டப்பட்டுள்ளன. அங்கு ஒவ்வோர் அகதியும் விசாரணைக்குரவர் ஒருவரால் தனித்தனி வரவேற்கப்படுகின்றார். ஒவ்வோர் சாயந்தரமும் நன்றியறிந்த தோத்திர ஆராதனை நடைபெறுகின்றது. 1950-ம் ஆண்டுமுதல் வந்த அகதிகளுக்கெனச் சுமார் 2,00,500 வீடுகள் கட்டப்பட்டுள்ளன. இன்னும்2,00,000 வீடுகள் கட்டப்படவேண்டியிருக்கின்றன.

● தென்னமெரிக்காவிலே பிறேசில் நாட்டின் புதியதலைப்பட்டணமாகிய பிறசிலியா நகரின் முதலாவதுஆலயத்தில் ஸ்தாபிக்கப்படுமாறு பாத்திமா மாதாவின் சுரூபம்ஒன்று பாத்திமா பதியிலே சமீபத்தில் ஆசீர்வதிக்கப்பட்டிருக்கிறது. இதுவரை அந்நாட்டின் தலைப்பட்டணமாய் இருந்துவந்த றியோ டி ஜனேய்றோநகரிலிருந்து மாற்றப்படும் பிறேசிலியா என்ற புதியதலைநகரின் ஓர்பகுதி ஏற்கனவே கட்டப்பட்டுவிட்டது.

● ஹங்கேரிய சுதந்திரஅரசியற்சி புரட்சியைத்தொடர்ந்து முதலாவது வருடத்திலே இத்தாலிய கம்யூனிஸ்த கட்சி தனது அங்கத்தவர்களில் சுமார் இரண்டுலட்சம அங்கத்தவர்களை இழந்துபோயிற்று. அங்கேகம்யூனிஸ்தகட்சி புதிய அங்கத்தவர்களைச் சேர்ப்பதற்கென்று விடாதுபரக்க வேலைசெய்துகொண்டு வந்தபோதிலும் நாள்தோறும் இன்னும்அதிகமானோர் அக்கட்சியில்இருந்து விலகிக்கொண்டே வருகின்றார்கள்.

● உலகில் கடுதாசிஉற்பத்திசெய்யும் மில்களுக்குள்ளே முழுக்காடுகளும் மறைந்துகொண்டுவருவதால் கடுதாசி செய்யும் மரப்பசைக்கென்று மாற்றுப்பொருளாக உபயோகிக்கக்கூடியதைக் கண்டறிவதிலே விஞ்ஞானிகள் தீவிரமாக ஈடுபட்டுவருகின்றார்கள். ஒருவேளை மனிதவர்க்கம் புராதனஎகிப்தியர், கிரேக்கர், றோமர் ஆதியோரின் "கடுதாசி"யான பப்பிறஸிலே திரும்பவும் எழுதவேண்டிய காலத்துக்குப் போகவும்கூடுமென்று சொல்லப்படுகிறது.

### ஒரேபிரசவத்தில் பிறந்த ஐந்துகுழந்தைகள்

ஒரேபிரசவத்திற்பிறந்த ஐந்துபிள்ளைகளாய் உலகில் உயிர்வாழ்ந்திருக்கும் ஒரேஐந்துபிள்ளைகள் ஆர்ஜென்ரீனுவின் தலைப்பட்டணமாகிய புவெனேஸ் அயேர்ஸ்நகரில் சஞ்சரித்துவருகிறார்கள். டிலிஜென்ரி பிள்ளைகளென அறியப்படுகின்ற இந்தஐந்துபிள்ளைகளும் சென்றமாதம் தங்கள்பதினைந்தாம்வயதைக் கண்டுகளித்தார்கள். இவர்கள் ஐவரும் ஓர்செல்வந்தரும், கத்தோலிக்கரும, புடவைஉற்பத்தி செய்கிறவருமான பிறுங்கோ டிலிஜென்ரிஎன்பவருக்குப்பிறந்த பிள்ளைகள். அவர்கள் பிறந்தபோது இவர்களின்பிரஸ்தாபத்தைத் தடுத்துவைக்குமாறு அவர்கள் பிறந்திருப்பதை இரகசியமாக வைத்திருந்தார். இவர்கள் வேறுவேறான விடுதிப்பாடசாலைகளிலே கல்விபயின்றுவருகிறார்கள். பிறந்தபெருநாளிலும், விடுமுறைநாட்களிலுமே இவர்கள் ஒருவரையொருவர் சந்தித்துக்கொள்ளுகிறார்கள். கனடாதேசத்தில் டியோன்னே என்பவருக்குப் பிறந்த ஐந்துபிள்ளைகளிலும் தற்போதுநால்வரே சீவந்தராயிருக்கின்றார்கள்

● ஆஸ்திறேலியாவிலே மெல்போண்நகரிலுள்ள அல்பிறெட்ஆஸ்பத்திரியில் விவியன் அன்டேர்ஸென் என்ற ஓர்இளம்தாய்க்கு 34முறை இரத்தம் செலுத்தப்பட்டிருக்கிறது. மூன்றுமாதகாலமாக டக்றர்மாரும், நேர்ஸ்மாரும் அவளின்உயிரைக் காத்துவைக்கப்போராடிக் கடைசியிலே வெற்றிகண்டார்கள். அவளுக்கென 400பேர் இரத்ததானஞ் செய்திருக்கிறார்கள். அவள்தற்போது குணமடைந்துவிட்டாள்.

● பிரான்ஸிலுள்ள மொனக்கோ என்ற சுதந்திர இளவரசுநாட்டினை ஆட்சிசெய்துவருகின்ற றெயினியர் இளவரசர் லூர்துபதியிலே தரைமட்டத்தின்கீழ் கட்டியெழுப்பப்பட்டுள்ள அர்ச். 10-ம்பத்திநாதரின் மகாதேவாலய கடனைத்தீர்க்க உதவியாய் 42,500பவுண் உபகரித்திருக்கின்றார். இந்தமகாதேவாலயத்தைக் கட்டிமுடிக்கப் 12லட்சத்து 75ஆயிரம் பவுண்செலவுபிடித்தது.

● அமெரிக்க விமானப்படையைச் சேர்ந்த ஆராய்ச்சிநிலையம் சென்ற7-ந்திகதியன்று 13றாத்தல்நிறையான ஓர் பெண்குரங்கைவைத்து வானவீதிக்கு ஓர்பலூனை அனுப்பியது. ஆனால், அது சுமார் 60,000மைல்உயரத்துக்குச் சென்றபின் வெடித்துவிட்டது. குரங்கின்நிலைமை என்னவாயிற்றென்பது தெரியவில்லை. அமெரிக்கவிஞ்ஞானிகள் குரங்குடன் தவளைகள், ஈக்கள் முதலியவற்றையும் பலூனில் வைத்திருந்தார்கள். இவற்றின் உணவுக்கென்று போதியவெங்காயம், உருளைக்கிழங்கு ஆதியனவும் வைக்கப்பட்டிருந்தன.

● அணுச்சக்தியால் இயங்கும் "நோட்டிலஸ்"என்ற அமெரிக்க நீர்மூழ்கிக்கப்பல் சமீபத்திலே முதன்முறையாக வடதுருவத்தைக்கடந்து பிரசித்திபெற்றிருக்கிறது. பசிபிக் சமுத்திரத்திலிருந்து அத்திலாந்திக் சமுத்திரம்வரையிலே பனிக்கட்டிகளின்கீழ் அதுநடத்திய இந்தப்பிரயாணத்திலிருந்து வடதுருவத்தின்கீழ் ஓர் புதியவர்த்தகப்பாதை திறக்கப்படக்கூடுமென்று வாஷிங்ரனிலிருந்து சென்ற9-ந்திகதி செய்திகிடைத்திருக்கிறது.

## கருணைக் கடலே! மரியே!

(வித்துவான் S. தாமஸ் உடையார், தஞ்சை.)

உன்னை மறந்து யானிந்த
உலகில் உழன்று திரிந்தாலும்
என்னை மறவாய்! தருணத்தில்
எல்லாம் உதவி புரிகின்றாய்!
கண்ணை இமைபோல் எனைக்காக்கும்
கருணைக் கடலே! மரியே! உன்
தன்னை அன்னையாய்ப் பெற்றசிறு
தனயற் கினியும் குறையுண்டோ?

நன்மை புரியேன் நாடோறும்
நாய்போ லலைந்து பொருள்தேடித்
தின்மை யென்ப தத்தனையும்
திரண்ட உருவாய் வாழ்கின்றேன்!
தன்மை அறியேன்· உன்னடியார்
தரமும் அறியேன் எனையேற்றாய்
இம்மை தனிலுன் மகவாக
இருக்கத் தவமென் செய்தேனே!

காக்கை கழுகு குருவியும் ஓர்
காசுக் குதவும் என்றாலே
மாக்கள் தமக்கோர் துளியேனும்
மண்ணில் உதவி யுண்டாமோ?
ஆக்கும் உலகம் அத்தனையும்
ஆக்கும் கடவுள் தனைமகவாய்
ஆக்கும் அன்னையே! உன்தொண்டன்
ஆக்கி யெனைநீ ஆள்வாயே!

### சின்னமடுமாதா திருநாள்

சின்னமடுத் திருப்பதியிலே வழமைபோலச் சென்றஆடிமாதம் 27-ந்திகதி கொடியேற்றத்துடன் நவதினஉற்சவங்கள் ஆரம்பமாயின. பல்லாயிரகிறிஸ்துவர்களும், பிறசமயத்தவர்களும் திருப்பதியில்வந்து சரிந்துகொண்டிருந்தமையானது, மாதாமட்டில் அணைகடந்த பக்திப்பிரவாகம் பெருக்கெடுப்பதைப் பிரத்தியட்சமாக்கிற்று. நாரந்தனைக் கட்டளைக்குரவர் யாத்திரிகர்களுக்கு வேண்டிய பிரயாணவசதிகளும, மற்றும்வசதிகளும் சிறப்பாகச்செய்திருந்தார். ஆராதனைகள் இம்முறை ஒரு புதியதிருப்பத்தை அடைந்திருந்தன. சென்ற 2-ந்திகதி முதற்சனிக்கிழமையன்று திருப்பதியில் மாலைப்பூசை நிறைவேறியது குறிப்பிடத்தக்கது. திருநாளுக்குமுதனாள் வண. எஸ். ஏ. ஞானப்பிரகாசம் சுவாமியவர்களின் உருக்கமானபிரசங்கமும், அங்குநடந்தேறிய தருக்கப்பிரசங்கமும் மக்கள் மனதிலே பெரும்அருட்சியை உண்டுபண்ணின. திருநாள் பெரியபாடற்பூசையுடனும், மாதாவின்திருச்சுரூப சுற்றுப்பிரகாரத்துடனும் இனிதே நிறைவெய்தியது. சங். கன்னியாஸ்திரிமாரும், பாடசாலைஆசிரியர்களும் திருநாளைக்கொண்டாடுவதிலே நன்மனங்காட்டி ஒத்துழைத்தமை பாராட்டற்குரியது. — நிருபர்

---

● அயர்லாந்திலிருந்து வாரந்தோறும் சனிக்கிழமைசாயந்தரம் நூறுநூறுயாத்திரிகர்களாக ஆகாயவிமானமூலம் லூர்துபதியையடைந்து, அங்கேஇரவுமுழுவதும் கண்விழித்திருந்து செபஞ்செய்து, நேர்த்திகள் செலுத்திப் பூசைகண்டு மறுநாள் தங்கள் நாட்டுக்குத் திரும்புகின்றார்கள். அயர்லாந்துதேச கத்தோலிக்கமக்கள் இவ்வாறு ஒழுங்குமுறைவகுத்து ஒவ்வோர்வார இறுதியிலும் விமானமூலம் லூர்துபதிக்கு யாத்திரைசெய்து திரும்புகின்றார்கள்.

● சமீபத்தில்ஸ்பெயினிலிருந்து அந்தோனியோ றிவேறோஎன்ற பத்துவயதுள்ள அனாதைப்பாலியன் ஆகாயவிமானமூலம் றோமாபுரிசென்று பாப்பரசரைப் பேட்டிகாணும் பாக்கியத்தைப் பெற்றுக்கொண்டான். இருவருடங்களுக்குமுன் இவன் பாப்பரசருக்குஎழுதிய கடிதம்ஒன்றிலே அவரைவந்து பார்க்கத் தான்ஆசிப்பதாகத் தெரிவித்திருந்தான். இதனைஅறியவந்த ஸ்பானியபத்திரிகைஒன்று பாடசாலைப் பிள்ளைகளுக்கெல்லாம் ஓர்வேண்டுகோள்விடுத்து, வேண்டியபணம் சேகரித்து அவனைறோமாபுரிக்கு அனுப்பிவைக்க ஏற்பாடுசெய்தது.

### மட்டக்களப்பு தாண்டவன்வெளித் தபால்

**அமரதினநினைவு:**

பத்தாண்டுகளாக எமதுபங்கில கட்டளைக்குரவராகத் தொண்டாற்றிப் பரமபதம் அடைந்தவரான வண. எஸ். லாசறஸ்சுவாமிகள் மரணமடைந்த நான்காவது ஆண்டு நினைவுதினம் சென்ற 5-8-58 செவ்வாயன்று வந்துபோனது. அன்றுகாலை 6மணிக்கு நமதுபங்குத்தேவாலயமணிகள் துக்கநாதம் இசைத்தன. பங்குக்கிறீஸ்துவர்களும், பாடசாலைப்பிள்ளைகளும், பத்திச்சபையினரும், பிறருமாகப் பெருந்திரளானோர் "பாத்திமாகிரி"யில் ஒன்றுகூடினர்.

கட்டளைக்குரவர் வண. ஜி. ஈ. எல். வம்பேக்சுவாமிகள் துக்கஉடைகள் அணிந்து, துக்கப்பாடற்பூசை நிறைவேற்றிவைத்தார். விசுவாசிகள் திருவிருந்தருந்தி மரித்துப்போன தங்களது முன்னாள்கட்டளைக்குரவரின் ஆன்மஇளைப்பாற்றிக்காக வேண்டிக்கொண்டனர் பூசைமுடிவில் கட்டளைக்குரவர் பூசைப்பரிசாரகர்புடைசூழ மரித்துப்போனகுரவரின் ஞாபகார்த்தமேடையை ஆசீர்வதித்து அவரின்ஆன்மஇளைப்பாற்றிக்காக விசேஷசெபவேண்டுதல்கள் செய்தனர்.

அன்றுபிற்பகல் 3மணிக்கு இப்பங்கிலுள்ள ஆண், பெண்பாடசாலையினர், ஆசிரியர்கள், மாணவர்மாணவிகள் ஒன்றுகூடிச் செபமாலைஓதி, விசேஷ செபங்கள்செய்து காலஞ்சென்றகுரவரின் ஆன்மஇளைப்பாற்றிக்காக ஒப்புக்கொடுத்தனர்.

இரக்கமுள்ளயேசுவே! மரித்துப்போன குரவருக்கு நித்திய இளைப்பாற்றியைக் கொடுத்தருளும்.

—நிருபர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 9,00,000 மக்கள் தட்டும் கன்னிகாமடக் கபாடம்

பிரான்ஸ்தேசத்தின் தலைப்பட்டணமாகிய பரீஸ்மாநகரைத் தரிசிக்கச்செல்லும் மாபெருந் தொகையான காட்சிப்பிரியர்களின் கண்ணையும், கருத்தையும் வருடாவருடம் அதிகமதிகமாகக் கவர்ந்துகொண்டிருக்கும் இடம் யாது? அங்கே வருடந்தோறும் சராசரிவீதமாக ஆறுலட்சம் உல்லாசப்பிரயாணிகள் கண்டுமகிழும் 'லுவா' என்ற பிரமாண்டமான அழகிய மாளிகையான நூதன பொருட்காட்சிச்சாலையா? இல்லை. வருடந்தோறும் மூன்று லட்சம்மக்கள் கையெடுத்துவரும் 'ஷான் ஷப்பெல்' எனப் பெயரிய மகாஅலங்காரமான புனித சிற்றாலயமா? இல்லை. பின்னர் மக்களை அத்துணை காதலாக ஈர்ந்துகொள்வதுதான் என்ன?

அந்நகரிலே 'றூ த் பக்' என்ற வீதியிலுள்ள அலங்காரமற்ற ஓர் கற்கட்டடமே. இதுதான் "அற்புத பதக்கம்" என்ற அற்புதவரவணிக்க சிற்றாலயம். இது இருந்துவரும் கன்னிகாமடத்தின் தனிக்கதவைத் தட்டித் திறக்கச்செய்து அதன்வழியாக அனுமதிக்கப்படுகின்ற பிரான்சிய தரிசகர்கள், பிறநாடுகளின் தரிசகர்கள்தொகை வருடந்தோறும் அதிகரித்துக்கொண்டே வருகிறது. அர்ச். வின்சென்ற் டீ போல் சபைக் கன்னியாஸ்திரிமாரின் தாய்மடமும், தேவதாயார் காட்சியளித்த தலமுமாகிய இந்தக் கன்னிகாமடத்தைச் சென்றவருடம் ஒன்பதுலட்சம் பேருக்குமேற்பட்ட மக்கள் தரிசித்திருக்கிறார்கள்.

1830-ம் ஆண்டு கார்த்திகை மாதம் 27-ந் திகதியன்று தேவதாயார் இந்தச் சிற்றாலயத்தில் சிஸ்றர் கத்தறின் லபுறே என்ற ஓர் நவகன்னியாஸ்திரிக்குக் காட்சியளித்தார். அந்தக் காட்சியிலே அவர் இந்த இளங் கன்னியாஸ்திரிமூலம் ஓர் தூது விடுத்தார். அதாவது, அவர்தாமே வெளிப்படுத்திய வடிவந்தாங்கிய பதக்கம் ஒன்று செய்யப்படவேண்டும்என்பதே. மாதாகேட்டுக்கொண்டபடியே பதக்கம் அடிக்கப்பட்டு உடனே தானே மிகப்பெருந்தொகையாக எங்கும் பரப்பப்பட்டது. அதன்மூலம் அபரிமிதமான வரப்பிரசாதங்கள், பாதுகாப்புகள், அற்புத ஆரோக்கியங்கள், மனந்திரும்புதல்கள் கிடைத்த காரணமாக "அற்புதபதக்கம்" என்ற நாமம் அதற்கு வழங்கப்படலாயிற்று.

1936-ம் ஆண்டு பரீஸ்நகர் அதிமேற்றிராணியார் இந்த அற்புத பதக்கம் எத்துணைபெருந்தொகையாக அடித்துப்பரப்பப் படுகிறதென்பதை விசாரணை செய்யுமாறு ஓர்கம்மிஷனை நியமித்தார். அதுநடத்திய விசாரணையின்போது, 1932-ம் ஆண்டுக்கும், 1936-ம் ஆண்டுக்குமிடையே 20 லட்சம் பதக்கத்துக்குமேல்தான் அடித்து வழங்கியதாக வாசெற்என்ற பரீஸ்நகர சித்திர-கொத்துவேலைசெய்யும் சிற்பி ஒருவர் தெரிவித்தார். இந்த விசாரணையின்போது பரீஸ்நகரிலும், லையன்ஸ் நகரிலுமுள்ள மற்றும் பதினொருபேர்கூறிய சாட்சியங்களிலிருந்து நான்கு வருடங்களிலும் மொத்தமாக மூன்றுகோடி பதக்கம் செய்யப்பட்டிருக்கின்றது. இன்னுமேஅது கூடிய தொகையாகச் செய்யப்பட்டுவருகிறது. மடத்தைத் தரிசிக்கிறவர்களில்அதிகமானோர் குறைந்தபட்சம் மூன்றுபதக்கத்துக்குக் குறையாதுவாங்கிச்செல்லுகின்றார்கள்.

—*—

### ஈருந்த காட்சியின் நூற்றாண்டுவிழா

பரிசுத்த தேவதாயார் அர்ச். பெர்னதெத் அம்மாளுக்கு அருளிய ஈருந்தகாட்சியின் நூற்றாண்டுதினவிழா லூர்துதிருப்பதியிலே சென்றமாதம் கார்மேல் மாதா திருநாளன்று கொண்டாடப்பட்டபோது, பரிசுத்தபிதா அத்திருப்பதிக்கு ஓர்விசேஷ செய்தி அனுப்பிவைத்தார் அன்று தினம் அப்பதியில்சமுகமாயிருந்த அநேகாயிரம் யாத்திரிகர்கள் மத்தியில் நூற்றுக்கணக்கான கார்மேல்சபையாரும் பிரசன்னமாயிருந்தார்கள். அன்றுகாலை அங்கு தரைமட்டத்தின் கீழுள்ள அர்ச். பத்தாம்பத்திநாதரின் மகா தேவாலயத்திலே அனுக்னிநகரின் கார்மேல்சபை மேற்றிராணியாரான கொம்பக்ஞேனி ஆண்டவர் பெரியபாடற்பூசை நிறைவேற்றினார். அன்றுசாயந்தரம் ஈருந்த காட்சிஅருளப்பெற்ற அதேநேரத்தில் மற்றோர் கார்மேல்சபைமேற்றிராணியார் திருக்கெபியில் ஓர் திவ்வியபூசை நிறைவேற்றினார். பாப்பரசர் அனுப்பிய விசேஷ செய்தியிலே, "ஆசாபாசங்களாலே அல்லல்பட்டுக்கொண்டிருப்பதும், வெறும் மாய்கைகளாலே வளைந்துகொள்ளப் பட்டிருப்பதுமான இந்தக்காலத்திலே உலகில் நிகழும்காரியங்களை அதிகம்தெளிவாயும், அமரிக்கையாயும் நீங்கள் ஆராய்ந்து நிர்மாணிக்குமாறு தேவனைநோக்கி உங்கள்நேத்திரங்களைஉயர்த்துங்கள்; உலகின் ஆத்மீக தேவைகள் அதிகமாயிருப்பதாலே செபஞ்செய்யுங்கள்; திருச்சபையின் அப்போஸ்தலிக்க தொண்டுகள் அத்துணை அதிகமாயிருப்பதாலே செபஞ்செய்யுங்கள்" எனக் கூறலாயினர்.

---

### வேனிற்கால மாளிகையில் பாப்பரசர்

ரோமைநகரிலிருந்து 13 மைல் தூரத்திலே அல்பான் குன்றுகளிலுள்ள காஸ்தெல் காந்தல்போ எனும்கிராமத்தில் இருந்துவரும் தமது வேனிற்கால மாளிகைக்கு வத்திக்கானிலிருந்து அன்றுவியாழக்கிழமை பாப்பரசர் போய்ச் சேர்ந்தபோது, மணிகள் ஆர்ப்பரிக்கக் கிராமவாசிகள் வாழ்த்துகள்கூறி அவரைவரவேற்றார்கள். அங்குபோய்ச்சேர்ந்து அரைமணி நேரத்தின்பின்னர் அவர் முதற் பகிரங்கதரிசன[illegible] மாளிகையின் மேன்மாடிமுன்பாகத் தமதுஇருகரங்களை அவர்இருபுறமும் விரித்து நீட்டியவண்ணம் தரிசனையளித்துக் கீழே தம்மை வாழ்த்திநின்ற மக்களையெல்லாம் ஆசீர்வதித்தார். 13 மைல் தூரமானவீதியின் மிகப்பெரும்பகுதியிலே மக்கள்வரிசையாக நின்றுகொண்டிருந்தமையால் வீதிநீளம் காத்துநின்ற அவர்களையெல்லாம் பதில்வாழ்த்துக்கூறித் தாம்ஆசீர்வதிக்குமாறு பதமையாகக் காரைச் செலுத்தும்படி தமது சாரதியிடம் பலதரம் கூறலாயினர். மாளிகையிலே கருதினுல் கனலிஆண்டவரும், மற்றும் குருசிரேஷ்டர்களும் அவரை வரவேற்றுநின்றார்கள்.

---

### லூர்துபதியும் யாத்திரிகர்களும்

சென்ற பங்குனிமாதம் 22-ந் திகதிமுதல் ஆடிமாதம் வரையிலே ஏறக்குறைய 450 விசேஷ றெயின்வண்டிகள் பிரான்சியர்களும், பிறநாடுகளைச் சேர்ந்தவர்களுமாக நான்குலட்சம்பேருக்கு மேற்பட்டயாத்திரிகர்களை லூர்துபதிகொண்டுபோய்ச் சேர்த்திருக்கின்றன. இவர்களிலே பதினாயிரம்பேர் பிணியாளர்கள். 450 விசேஷ றெயின்வண்டிகளிலும் சுமார் 5,000 பெட்டிகளும், 400 அம்புலன்ஸ் பெட்டிகளும் அடங்கியிருந்தன. முன் கூறிய நான்கு லட்சம் பேரும் லூர்துபதிக்குச் சென்றுள்ள மொத்தமானயாத்திரிகர்களில் ஒருபகுதியினர்மாத்திரமே. சென்ற பங்குனிமாதமுதல் வாரம் ஒன்றுக்குப் பத்து ஆகாயவிமானங்கள் ஒஸ்ஸன்என்ற லூர்துபதிஆகாயவிமானநிலையத்தில் யாத்திரிகர்களை இறக்கியுள்ளன. அவைகள் ஒவ்வொன்றும் சராசரியாக 600 பேரை இறக்கியுள்ளன. இன்றும் பெருந்தொகையான யாத்திரிகர்கள் வழமையான றெயின்வண்டிகளிலும், பிரத்தியேக கார்கள், சாதாரண பிரயாண ரதங்களிலும், பிறவற்றிலும் அங்கு சென்றிருக்கிறார்கள். வழமையிலே வருடம் ஒன்றுக்கு அங்குசெல்லும் யாத்திரிகர்களில் 70 விகிதமானோரும் இவ்விதம் பிரயாணஞ்செய்கிறவர்களே.

—*—

# வத்திக்கானும் சுகாதார சேவையும்

மற்றெந்த இராச்சியத்துடனும் ஒப்பிட்டுப் பார்க்கத்தகுந்த "தேசிய சுகாதார" திட்டம் ஒன்றை வத்திக்கான் இராச்சியம் கொண்டிருக்கிறது. இது அதில் வதியும்மக்களின் நன்மைகளுக்காகவேயாகும். சுகாதார இன்சூறன்ஸ் நிதியென இது அறியப்படுகிறது. 6,534 பேர் இதில் சேர்ந்திருக்கின்றனர். இவர்களெல்லாம் வத்திக்கான் இராச்சிய பிரசைகளும், அவர்களில் தங்கியிருப்பவர்களும், மற்றும் பணியாளர்களும், இவர்களின் குடும்பத்தினர்களுமே. இவர்களில் கருதினல்மாரும், குருசிரேஷ்டர்களும், காவலாளரும், வாயில் காப்போரும், மகிமைக்காப்பாளரும், மாளிகை விசாரணைக்காரரும், அர்ச். பேதுருவானவர் மகா தேவாலய பணியாளரும், வத்திக்கான் பண்டகசாலைகளின் லிகிதர்களும் அடங்குவார்கள்.

இந்தநிதி பரிசுத்தபிதாவால் ஏற்படுத்தப்பட்டது. இந்தநிதிக்குப் பணியாளர்கள் தங்கள் சம்பளத்தில் நூற்றுக்கு இரண்டுவிகிதம்உபகரிக்க, வத்திக்கான்நிர்வாகம் மேலதிகமாக மூன்றுவிகிதம் போட்டு உதவுகின்றது. இதில் சேர்ந்தவர்களுக்கெல்லாம் விசேஷ வைத்திய நிபுணர்கள், டக்றர்மாரின் சேவைகளும், மருந்துகளும் இலவசமாக வழங்கப்படுகின்றன. ஒருவர் நோய்வாய்ப்படுமிடத்து, வைத்தியபரிசோதனைக்காக வத்திக்கானுக்குச் செல்லுகின்றார். அன்றேல் அவருடைய வீட்டுக்கு டக்றர்ஒருவர் அனுப்பிவைக்கப்படுகின்றார். தனக்கு எழுதிக்கொடுபடும் மருந்துகளை வத்திக்கான் மருந்துச்சாலையில் இலவசமாகப் பெற்றுக்கொள்ளுகின்றார்.

சுகாதாரசேவைகளின் தலைமை [illegible]. 10-ம் பத்திநாதரது கட்டளையின்பேரிலே அமைக்கப்பெற்ற ஓர் கட்டடத்தில் இருந்துவருகிறது. இதில் அதிகம் தற்கால மாதிரியான இருபது பரிசோதனை அறைகளும், சிகிச்சை அறைகளும் இருக்கின்றன. எக்ஸ்-றேயும், நோய்களைக் கண்டறிந்து பதிவுசெய்யும் ரசாயன பாகசாலைகளும், பல், காது, மூக்கு, தொண்டை, கண் ரோகங்களுக்குச் சிகிச்சைசெய்துகொள்வதற்கான வசதிகளும் இருக்கின்றன. இதிலே வைத்தியதொண்டு ஆற்றுதற்கென்று 12 விசேஷ வைத்தியநிபுணர்களும், 17 சாதாரண டக்றர்களும் இருக்கின்றார்கள். இவர்களெல்லாம் சுகாதார சேவைத்தலைவரும் பாப்பரசரின் வைத்தியருமான டக்றர் றிக்கார்டோ கலியாஸி லிஸிஅவர்களின் கீழ் தொண்டாற்றி வருகின்றார்கள்.

நோயாளி ஒருவர் ஆஸ்பத்திரி ஒன்றுக்குப் போகவேண்டிய அவசியமேற்படும்போது, நிதியைப் பரிபாலிப்பவர்களால் குறிக்கப்படும் றோமைநகர ஆஸ்பத்திரிக்குப் போவாராஞல் அங்கே அவருக்கு ஏற்படும் செலவுமுழுவதையும் அவர்கள் பொறுப்பார்கள். ஆனால், அவர் தனது எண்ணப்படியே டக்றர் ஒருவரைத் தெரிந்துகொண்டு மற்றோர்ஆஸ்பத்திரிக்குச் செல்வாராஞல், மேலதிகமாக ஏற்படும் செலவை அவரே பொறுக்கவேண்டும்.

வத்திக்கானின் பன்னிரு திருச்சங்கங்களிலும் இரண்டு இந்தச் சுகாதார சேவைநிதியில் சேர்ந்துகொள்ளவில்லை. பரிசுத்த காரியாலய திருச்சங்கமும், விசுவாசப் பரப்புதற் திருச்சங்கமுமே அவ்விரண்டுமாகும். ஏனெனில், இவைகள் தங்களுக்கென்று சொந்தமாகச் சுகாதாரசேவைகளைக் கொண்டிருக்கின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆவணிமாதம்

**பொதுக்கருத்து:** மாக்ஸிய (பொதுவுடைமை) கொள்கைகளின் தவறானபோக்கையும், ஆபத்துகளையும் அனைவரும் நன்குணர்ந்து, அவற்றை வெறுத்துத் தள்ளுவதற்காக வேண்டிக்கொள்வது.

**வேதபோதக கருத்து:** நைஜீரியாவில் உண்மையான கிறீஸ்துவவாழ்க்கை மலரும்படியாக மன்றாடிக்கொள்வது.

சத்திய வேத
பாதுகாவலன்
1958-ம் ஆண்டு
ஆவணி மாதம் 14-ந் திகதி

## நடக்கப்போவது என்ன ?

மலைவயிறுநொந்து சுண்டெலி ஒன்றைப்பிரசவித்தவாறு தமிழ்மொழி உபயோக மசோதா பாராளுமன்றத்தில் ஒருவாறு கரையேறிவிட்டது. அதுவிஷயமாய்ப் பிரதமர்பண்டாரநாயகா தேனேபோல்கூறியமொழிகளைக்கேட்டுத் தமிழ்மக்களுள் எவர்செவிதான் குளிர்ந்திருக்கமாட்டாது!

— உண்மையில் தமிழ்மக்களின் உள்ளப்புண்களை ஆற்றவேண்டிய சமயமேஇது — இந்தமசோதா நிறைவேறியதால் நாட்டில் சமூகஐக்கியம் ஏற்படும் — தமிழ்ப்பேசும்மக்களுக்கு நியாயமான அந்தஸ்துவழங்கி அதன்மூலம் நாட்டிலே ஐக்கியத்தைப் பாதுகாப்பதுதான் இந்தமசோதாவின்நோக்கம் — நான்கொண்டுவந்த சட்டங்களிலெல்லாம் பெருமைப்படக்கூடிய ஒன்று இந்த மசோதாதான் — இன்னும் ஒருவருடகாலத்தில் பாஷைப்பிரச்சினைஒன்று இருக்கமாட்டாது; அதற்கு இடமேவராது; அது இன்னும் ஒருவருடகாலத்தில் மறைந்துவிடும்; அதன்மேல் நாட்டில் அமைதிஏற்பட்டுச் சௌசன்னியசூழ்நிலையில் இங்குள்ள மக்கள்சகலரும் வாழ்வார்கள் — இந்தமசோதாவால் தமிழர்களைக் கொல்லப்போவதாகவோ, அன்றேல் அடிமைகளாக்கப் போவதாகவோ எவரும் நினைக்கவேண்டியதில்லை — தமிழ்மொழிமசோதாவைத் தமிழ்-சிங்கள சமூகத்தவர்கள் விரைவிலே திருப்திகரமாக ஏற்றுக்கொள்வார்களென்றும், சமஷ்டிக்கட்சித் தலைவர்கள் என்ன சொன்னாலுஞ்சரி, பாஷைப்பிரச்சினைபற்றிய தகராறு இன்னும்ஒருவருடகாலத்துள் மறைந்து, இருசாராருக்குமிடையே சௌசன்னிய சுகவாழ்வு ஏற்படுமென நம்புகிறேன் — அமைதிக்கும், சௌசன்னியத்துக்கும் சுவர்க்கபூமியாக இலங்கை விளங்கவேண்டுமென்பதே எனது ஆவல் — ஆகவே, தமிழ்மொழிமசோதாவை ஏற்றுக்கொள்ளும்படி தமிழ்ப்பேசும் பெருமக்களைக் கேட்டுக்கொள்ளுகிறேன் — என்றெல்லாம் பிரதமர் தேனொழுகக் கூறியிருக்கும்போது தமிழ்மக்கள் ஏன் தியங்கவேண்டும்?

அம்மட்டா! சிங்களம்மட்டும் மசோதாவைப் பலப்படுத்தவே இந்தத்தமிழ்மசோதாவை நான் கொண்டுவந்திருக்கிறேன்; இல்லாவிட்டால் மற்றோர் பிரதமமந்திரிவந்து, தமிழுக்குச் சமஅந்தஸ்துக் கொடுக்கக்கூடியதாகத் தனிச்சிங்கள மசோதாவைத் திருத்தவும்கூடும்; இந்தமசோதா நிறைவேறினால் அந்தப்பயத்துக்கு இடமேயில்லை; அதாவது இம்மசோதாமூலம் சிங்களம் மட்டும் மசோதாவுக்குள்ள அபாயம் நீக்கப்பட்டுவிட்டதென்றும் அவர்கூறுமிடத்து, தமிழ்மக்கள் எதற்காக அஞ்சவேண்டும்? அந்த 'அபாயம்'தானே நீக்கப்பட்டுவிட்டதே! நிற்க, பிரதமர் ஆசிக்கிறபடி, தமிழ்மொழி மசோதா தமிழ்மக்களின் வரவேற்பைப்பெற்றுக்கொண்டுவிட்டதா! அவ்வாறாயின் அஃது பாராளுமன்றத்தில் அரங்கேறிய தினமே தமிழ்மக்கள் வாழும் பகுதிகளிலெல்லாம் வெற்றிக்கொடிகள்ஏற்றி விழாக்கள் கொண்டாடப்பட்டிருக்குமே. அதற்குமாறாகக் கறுப்புக்கொடிகள் இழுத்து, ஹர்த்தால்அனுட்டித்துத் துக்கங்கொண்டாடப்பட்டதென்ன?

தமிழர்களே தமிழ்மொழி மசோதாவையிட்டுத் திருப்தியற்றிருக்கும்போது, அது சமஅந்தஸ்திலும்பார்க்கக் கூடியஅந்தஸ்தைத் தமிழுக்கு அளிக்கிறதென்றும், அதுசிங்களத்தைக் கீழ்த்தரமானநிலையில் வைக்குமென்றும் சிங்கள எம். பி. ஒருவரும், தமிழ்மசோதாவை ஒழிப்பதற்கும், அதனை ஆதரித்து வாக்களித்த எம். பி. களைத் தோற்கடிப்பதற்குமான ஓர் இயக்கத்தை ஆரம்பிக்கவேண்டுமென்று சிங்களஎம். பி. மற்றொருவரும் கூறுகின்றனர். அதனை எதிர்த்துவாக்களித்த அரசாங்க கட்சி எம். பி. யும், உபமந்திரியுமான ஒருவர் கட்சியினின்று வெளியேற்றப்பட்டு, உபமந்திரி பதவியிலிருந்தும் பலவந்தமாக நீக்கப்பட்டார். மற்றொருவர் தமிழ்மொழிமசோதாவாலே ஏதோகுடிமுழுகிவிட்டதாகக் கண்ணீர்விட்டழுதார்.

இவ்வாறு சிங்களவர்களிடையே எதிர்ப்பிருக்கும்போது பிரதமர் ஆசிக்கிறபடி, ஐக்கியமும், சுகவாழ்வும் ஏற்படுமா? சிங்களம்மட்டும்சட்டம் கொண்டுவரப்பட்ட காலந்தொடக்கம் நாட்டில் அமைதியின்மையும், ஒழுங்கீனமுந்தான் ஆட்சிபுரிகின்றன என்று வவுனியா எம். பி. அவர்கள் பாராளுமன்றத்தில் எடுத்துக்கூறியகாரணம் இருக்கும்வரை அமைதியும், ஒழுங்கும் ஏற்படுமா? அங்ஙனமாக "சிங்களவர் தங்கள்மொழிமீதுள்ள பற்றினால் சிங்களத்தைத் தமிழரின்தொண்டைக்குள் திணிக்க விரும்பலாம்; ஆனால், அவ்வாறு செய்வதினால் நாட்டின் முழுநிர்வாகயந்திரமும் ஸ்தம்பித்துவிடுமென்பதை அவர்கள் உணரவில்லை; இந்நாட்டில் சிங்களவரும், தமிழரும் சமாதானமாக வாழ அவர்களுக்குச் சமஉரிமை இருக்கவேண்டும்; சமஅந்தஸ்து அடிப்படையில் மட்டுந்தான் தேசியஐக்கியம்நிலவும்; சமஅந்தஸ்துத்தான்தேசியஐக்கியத்தை உண்டாக்கும்" என்று ஓர்சிங்கள எம். பி. இந்தவேளை கூறுவாராயின் இதில்உண்மை உண்டா, இல்லையா? பிரதமர் கூறியுள்ளபடி அவரின்தமிழ்மொழி மசோதா தமிழ்மக்களின் உள்ளப்புண்களை உள்ளபடியேஆற்றுமா? அவர்களின் புண்பட்ட உள்ளங்களின் வேதனையைப் போக்குமா? அத்தால் பாஷைப் பிரச்சினை பற்றியதகராறு ஓராண்டுஒருவருடத்திலே மறைந்துவிடுமா? நல்லது இருந்துபார்க்கவேண்டியதே.

---

## தெரேசாநியூமன் — திருக்காய வரம்பெற்ற மாது

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கொள்ளும்அதிர்ஷ்டத்தைப் பெறலானேன். கிராமச்சத்திரம் தரிசகர்களால் நிறைந்துபோயிருந்தமையால் ஓர்கற்சிற்பரின் சிறியஇல்லத்திலே ஓர் பவேரியகுருவானவருடன் நான் தங்கியிருந்தேன்.

### உயிருள்ள சாட்சிகள்

இங்குவசிக்கும்மக்கள் கள்ளங்கபடற்றவர்கள். யதார்த்தமுடையவர்கள். சாப்பாட்டுக்கும், விடுதிக்குமாக ஒருசிலினுக்குமேல் அவர்கள் எங்களிடம் செலவுபணம்வாங்க அறவே மறுத்துவிட்டார்கள். கொன்னேர்ஸ்றூதை உலகப்பிரசித்தியடையச்செய்த அற்புதநிகழ்ச்சிகளுக்கெல்லாம் கண்கண்டசாட்சிகளாய், உயிருள்ள சாட்சிகளாய்வாழ்ந்துகொண்டுவருகின்ற இந்தநல்லசனங்கள் இராப்போசனவேளையிலே தெரேசாவின் சரிதையை எங்களுக்கு எடுத்துக்கூறினார்கள்.

### இளமையில் கடினவேலை

"தெரேசா மற்றும் கிராமப் பெண்பிள்ளைகளைப்போலவே ஊக்கமும், பயபக்தியும், கீழ்ப்படிதலுமுள்ளவளாய் இருந்தாள்" என்று கொன்னேர்ஸ்றூதை அடிக்கடிபோய்த் தரிசித்துவந்தவரான லுவோநகரின் காலஞ்சென்ற தியோடோரேவிஸ் அதிமேற்றிராணியார் எழுதிய "தெரேசாநியூமனின் வாழ்க்கைப் பரவசங்கள்" எனும் உரைகல்போன்றசிறந்தநூலில் குறிப்பிட்டிருக்கின்றார். அவள்பாடசாலையிலே அதிகஞ்சிறந்தமாணவிகளிடையே விளங்கியிருந்தாள். 1914-ம்ஆண்டு பாடசாலையைவிட்டு நீங்கியபின் கமக்காரனும், சத்திரத்தலைவனுமான ஒருவரின்கீழ் வேலைக்கமர்ந்தாள். சத்திரத்திலும், லாயத்திலும், போரடிக்கும்களத்திலும் இவள் மிகவும்கடுமையான வேலைகள் செய்துவந்தாள். 1914-ம் ஆண்டு முதலாவதுஉலகயுத்தம் மூண்டபோது உழுதல், எருத்துமாட்டுவண்டிகளை ஓட்டுதல்முதலாம் ஆடவர்செய்யும் வேலைகளைத்தானும் இவள்செய்துவந்தாள்.

ஆனால், தெரேசா இருபது வயதுடையவளாய் இருந்தபோது நிகழ்ந்த சம்பவம்ஒன்று அவளது வாழ்க்கையின்போக்கை அறவேமாற்றி ஓர்புதியதிருப்பத்தைஉண்டுபண்ணிவிடலாயிற்று. அஃது என்ன? 1918-ம்ஆண்டு பங்குனிமாதம் 10-ந்திகதியன்று தெரேசாவின் எசமானுடைய வீட்டுக்குச்சமீபமாக அந்தக்கிராமத்திலே ஓர்பெருந்தீ பற்றிப்பிடிக்கலாயிற்று. அங்கே தீயணைக்கும்படையோ அன்றேல் தீயணைப்பவர்களோ சமீபத்தில் இல்லாமையால் கிராமத்தின் நீரூற்றிலிருந்து மூளாசிளரிந்துகொண்டிருந்த தானியக்களஞ்சியசாலைவரையிலே கிராமவாசிகள் சங்கிலித்தொடர்போல வரிசையாய்நின்று கைவாளிகளிலே கைமாறிமாறித் தண்ணீர் அனுப்பிக்கொண்டிருந்தார்கள். தீயணைக்கும்முயற்சியில் தெரேசாவும்தீவிரமாகஈடுபட்டாள். அவள் ஓர்கதிரைமேல் நின்றுகொண்டு, மேலே தீச்சுவாலைகள்மீது தண்ணீரை ஊற்றிக்கொண்டிருந்த ஓர்மனிதனிடம் பாரமான தண்ணீர் வாளிகளை உயரத் தூக்கிக் கொடுத்தவண்ணமிருந்தாள்.

"ஏற்கனவேநான் இரண்டு மணித்தியாலங்களாக இவ்விதம் வேலைசெய்துகொண்டிருந்தேன்; ஆனால், நான்தூக்கிக் கொடுத்துக்கொண்டிருந்த வாளி எனது கையிலிருந்து திடீரெனவிழுந்தபோது, அதன்மேல் யாதொன்றும்செய்ய இயலாதவளானேன்; யாதோ ஒன்று என்னை இறுக்கி நெரித்தாற்போல என்முதுகுப்புறம்உளைந்து எனக்குப்பெரும் வேதனையை உண்டுபண்ணியது; அதனால்நான் கதிரையிலிருந்து கீழேயிறங்கித் தீயைஅணைத்துக் கொண்டிருந்த இடத்தைவிட்டு அப்புறப்படவேண்டியவளானேன்" என்று அவளேகூறியிருக்கின்றாள்.

(வளரும்)

---

### சிங்களத்திலும் தமிழிலும்

தமிழ்மொழிஉபயோக விசேஷவிதிகள் மசோதா சட்டமாகி நடைமுறைக்குவந்ததும் அரசாங்கத்துக்குத் தமிழில்எழுதப்படும் கடிதங்களுக்குச் சிங்களத்திலும், தமிழிலும் பதில் கிடைக்கவிருக்கிறது. நாட்டின் உத்தியோகமொழி சிங்களமாயிருப்பதாலே தனிச்சிங்களசட்டத்தை மீறுமலிருக்கும் நடவடிக்கையாகத் தமிழ்ப்பதிலுடன் சிங்களத்திலும் பதில்அனுப்பப்படவிருக்கிறது. தமிழிலே அரசாங்கத்துக்கு எழுதப்படும் கடிதம்ஒன்றுக்குச் சிங்களத்தில் பதில்அனுப்பிவைக்கப்படும். ஆனால், அந்தச்சிங்களப்பதிலுடன் தமிழ்மொழிபெயர்ப்பும் இருக்குமென்று விளக்கம்கொடுபட்டிருக்கிறதாம்.

### குருப்பட்டாபிஷேகம்

யாழ்ப்பாணம், பரிசுத்தபுதுமைமாதா கோவிலைச்சேர்ந்த எல். சி. பொன்னுக்கோன் தம்பதிகளின்புதல்வரான வண. சி. பனிமயம் லோப்பையா O. M. I. பிறதரும், கொழும்பிலே வெலிக்கடைச் சிறைச்சாலைப்பகுதியில் கடமையாற்றிவருகிறவரான திரு. ஏ. டி. ஜி. அமிர்தம்பிள்ளை அவர்களின் புதல்வரான வண. ஒஸ்வால்ட் ஹூல்ஸ்றன் O. M. I. பிறதரும் இன்றுவியாழக்கிழமைகாலை 7-30மணிக்குக் கண்டியிலே அம்பிற்றியாவிலுள்ள லங்காமாதா தேசியகுருமடத்துச் சிற்றாலயத்திலே குருத்துவாபிஷேகம் செய்யப்பெறுவார்கள். இருவரும் மறுதினமாகிய மாதாவின்மோட்சாரோபண திருநாளன்று அங்குதானே தங்கள் முதற்பூசைப்பலியை நிறைவேற்றுவார்கள். பிந்தியவர் 17-ந்திகதிஞாயிற்றுக்கிழமைகாலை போறளையிலுள்ள சகலஅர்ச்சியசிட்டவர்கள் கோவிலிலே தமது முதற்பாடற்பூசையை நிறைவேற்றுவார். முந்தியவர் வருகிற ஐப்பசியிலே யாழ்ப்பாணம்வந்து இங்கே முதன்முதலாகத் திவ்வியபூசை நிறைவேற்றுவாரென அறிகின்றோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுதேச வர்த்தமானம்

### குருமார் ஞானவொடுக்கம்

யாழ்ப்பாண மேற்றிராசனத்தைச் சேர்ந்த அமலோற்பவிசபைக் குருமாரின் வருடாந்த முதலாவதுஞானவொடுக்கம் இம்மாதம் 19-ந் திகதியாகிய வருகிற செவ்வாய்க்கிழமை பிற்பகல் ஆரம்பமாகி அடுத்த 26-ந் திகதி செவ்வாய்க்கிழமைகாலை முடிவாகும். இரண்டாவது ஞானவொடுக்கம் புரட்டாசி மாதம் 2-ந் திகதி செவ்வாய்க்கிழமை பிற்பகல் ஆரம்பமாகி அடுத்த 9-ந்திகதி செவ்வாய்க்கிழமை காலை முடிவாகும். விக்கார்ஜெனறலாகிய மிகவண. எச். லெக்குத்தூர்சுவாமியவர்கள் ஞானவொடுக்கபோதகம் செய்யவிருக்கின்ருர்.

### யாழ்ப்பாணப் புதியமேயர்

யாழ்ப்பாண நகரசபையின் விசேஷ கூட்டம்ஒன்று சென்ற 11-ந்திகதி திங்கட்கிழமை நடைபெற்றது. அதிலே யாழ்ப்பாணப் புதியமேயராக நான்காமவட்டாரப் பிரதிநிதியும், பிரக்கிராசியாருமான திரு. அல்விறெட் துரையப்பாஅவர்கள் தெரிவுசெய்யப்படலாயினர். முன்னுள்மேயர் திரு. பி. காசிப்பிள்ளை அவர்கள்மீது சமீபத்திலே நம்பிக்கையில்லாப் பிரேரணை நிறைவேறியமையால் புதிய மேயரின் தேர்தல் நடைபெற வேண்டியதாயிற்று. தேர்தலின்போது புதியமேயரின்பெயரைக் காதி எம். எம். சுல்தான் அவர்கள் பிரேரேபித்தார். திரு. ஆர். சி. மன்மதராயன்அவர்கள் அனுமதித்தார். வேறுஎவருடைய பெயரும் பிரேரிக்கப்படவில்லை.

### மன்னுரும் மாட்டுரோகமும்

மன்ஞர்ப்பிரிவிலே மாந்தைக் காரியாதிகாரியின் பகுதியில் மாடுகளுக்கு ஏற்பட்டுள்ள வாய்நோய், குரநோய் தற்போது முசலிக்காரியாதிகாரியின் பகுதியில்அடங்கிய முருங்கன், நானாட்டான், பெரியகட்டைக்காடு முதலிய இடங்களிலும் பரவியுள்ளது. அதனல், இந்தக்கிராமங்களிலிருந்து மாடுகள் பிறவிடங்களுக்குக் கொண்டுபோகப்படுவதை மன்ஞர் அரசாங்கஅதிபர் தடைசெய்துள்ளார். மாந்தைப்பகுதியில் ஏற்பட்டுள்ள இந்தநோய் காரணமாகச் சிலமாடுகள் இறந்தபோதிலும் ஏனைய இடங்களிலும் இந்தநோய் பரவாது தடுக்கும்முயற்சியில் மன்ஞர் மிருகவைத்தியஅதிகாரி ஈடுபட்டிருக்கின்ருர். அவர்தலைமையில் உத்தியோகஸ்தர்பலர் மாடுகளுக்கு ஊசிமருந்தேற்றி வருகின்றனர். நோய்பரவியுள்ள இடங்களிலிருந்து மாடுகள் அப்புறப்படுத்தப்படாமல் இருப்பதற்காகப் பலவிடங்களில் தடைகள்போட்டுக் காவல்வைக்கப்பட்டுள்ளது.

### அம்மைநோயும் பால்தற்றலும்

சுகாதாரமந்திரி காரியாலயம் சென்றதிங்கட்கிழமை விடுத்துள்ள ஓர் அறிக்கையிலே, லேடன்தீவின்எல்லைக்குள் அடங்கியபகுதியிலே 17பேருக்கு அம்மைநோய்கண்டு, அவர்களில்இருவர்இறந்துவிட்டதாக அறிவிக்கப்பட்டுருக்கிறது. அதனுல் நாரந்தனை, வேலணைக் கிராமச்சங்கங்களின் எல்லைகளுள் அடங்கியபகுதியும், ஊர்காவற்றுறைப் பட்டினசங்கபகுதியும் நோய்கண்டுள்ள பிரதேசமாகப் பிரகடனஞ் செய்யப்பெற்று, நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. இந்தஇடங்களிலிருந்து வெளியேறுகிறவர்களும், இந்த இடங்களுக்குப் போகிறவர்களும் கடந்தமூன்றுமாதகாலத்துள் அம்மைப்பால் குற்றப்பட்டதாகத் திருப்திகரமான அத்தாட்சி காண்பித்தால் அல்லாது மற்றப்படி எல்லோரும் பால் கட்டிக்கொள்ள வேண்டியவர்களாவர். எல்லோரும் அம்மைப்பால் கட்டுவித்துக்கொள்ளுமாறு கேட்கப்பட்டிருக்கிருர்கள்.

### கத்திகளும் கொலைகளும்

இலங்கையில் நடைபெற்றுவரும் பெருந்தொகையான கொலைகளுக்குக் கத்திகளே பாவிக்கப்பட்டிருக்கின்றன. சென்றவருடம் மொத்தமாக நடந்துள்ள 527கொலைகளில் ஏறக்குறைய அரைவாசியும்—அதாவது 215கொலைகள் கத்திகளினுல் நிகழ்ந்துள்ளன. அதனுல் கொலைகளுக்குக் கையுதவியாய் இருந்துவருமகத்திகளைத் தடைசெய்வதுபற்றிப் பொலிசர் ஆராய்ந்து வருகிருர்கள்.

### லொறிவிபத்து

தீவிரவேகத்தில் செலுத்தப்பட்டுவந்த லொறிஒன்று சென்றசனிக்கிழமை கொடிகாமச்சந்தைக்குச் சமீபமாகத் தன்முன்எதிர்ப்பட்ட இருமாட்டுவண்டிகளை நொருங்கச்செய்து, மாடுகளையும்கொன்று, மற்ருேர்மாட்டையும்காயப்படுத்திவிட்டு மரம்ஒன்றில்போய் மோதிக் குடைசாய்ந்தது. சாரதியும், கிளீனரும் காயமடைந்து ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டனர். இந்தலொறியின் தீவிரவேகத்தைக் கண்ணுற்ற பாதசாரிகள் மூடைமுடிச்சுகளையும் அப்பால்எறிந்துவிட்டோடி உயிர்தப்பியதாகச் சொல்லப்படுகிறது.

### பிள்ளைகளும் வீட்டுவேலையும்

பன்னிரண்டுவயதுக்குக் குறைந்த பிள்ளைகளை வீட்டுவேலைக்கு அமர்த்துவதைத் தடுக்கும்சட்டவிதிகளை அரசாங்க தொழிற்பகுதி சென்றதிங்கட்கிழமைமுதல் நடைமுறைக்குக் கொண்டுவந்திருக்கிறது. அதனுல் பன்னிருவயதுக் குட்பட்டபிள்ளைகளை வேலைக்குவைத்துக்கொள்வது அன்றுமுதல் தண்டனைக்குரிய குற்றமாகும். இந்தவிதிகளை மீறுகிறவர்களுக்கு ஆயிரம்ரூபா அபராதமோ, அன்றேல் ஆறுமாதக் கடுமூழிய சிறைத்தண்டனையோ விதிக்கப்படும். இந்தவிதிகள் சரிவரஅனுசரிக்கப்படுகின்றனவா என்பதைக் கண்டறிய முப்பது தொழில் இன்ஸ்பெக்றர்மார் நியமிக்கப்பட்டிருக்கின்றனர். இவர்கள் வீடுவீடாகச் சென்று பன்னிருவயதுக்குட்பட்ட சிறுவர், சிறுமிகள் வேலைக்கமர்த்தப்பட்டிருக்கிருர்களோ என்பதைக் கண்டுபிடிப்பதில் ஈடுபடுவார்கள்.

### தமிழரும் சிங்களப்படிப்பும்

வடமாகாண ஆசிரியர்கள்சங்கத்தின் 43-வதுவருடாந்த பொதுக்கூட்டம் சென்ற10-ந்திகதியன்று வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக்கல்லூரியிலே நடைபெறலாயிற்று. அதிலே சங்கதலைவர் திரு. ஈ. சபாலிங்கம்அவர்கள் பேசியபோது: "மொழிசம்பந்தமான உரிமைகள்யாவும் கிடைக்குமவரை 'சிங்களம்மட்டும்'சட்டத்தைத் தமிழ்ப்பேசும்மக்கள் ஒரேகுரலில் இறுதிவரை எதிர்க்கவேண்டும்; தமிழ்ப்பாடசாலைகளில் சிங்களம் படிப்பிக்கப்படுவதை நாம்ஒருபோதும் அனுமதிக்கப்போவதில்லை; தமிழ்ப்பேசும்மக்களுக்குத் தமிழ்உபயோக (விசேஷவிதிகள்) மசோதா அவர்களின் அடிப்படைஉரிமைகளைக் கொடுப்பதாகத் தெரியவில்லை; தற்போதைய அரசியல்நிலைமையையே இந்தமசோதா குறிக்கின்றது; 'சிங்களம்மட்டும்'சட்டம் நடைமுறையில் இருக்கவேண்டுமென்ற ஒரே நோக்கத்துடன் தற்காலிகமாக இந்த மசோதா கொண்டுவரப்பட்டுள்ளது; 'சிங்களம்மட்டும்' உத்தியோகபாஷையாக இருப்பதைத் தமிழர்கள் ஒருபோதும் அனுமதிக்கமாட்டார்கள்; எது எப்படியானுலும் தற்பொழுது நாம் செல்லவிருக்கும்பாதை மிகவும் கரடுமுரடானது; நாம் அநேகதியாகங்களும்செய்யவேண்டி நேரிடும்; திடகாத்திரமுள்ள மனதுடையவர்களாக நாம்இருக்கவேண்டியது அவசியம்" எனக்கூறலாயினர்.

### முதற்பூசையும் வரவேற்பும்

ரோமாபுரியிலே விசுவாசப்பரப்புதல் குருமடத்தில் வேதசாஸ்திரங்கற்றுச் சென்றமார்கழிமாதம் 21-ந்திகதியன்று குருப்பட்டம்பெற்றவரும், யாழ்ப்பாணம், சம்பத்திரிசியார் கல்லூரி வீதியில் வசித்திருந்து சமீபத்திலே காலஞ்சென்ற ஸ்ரீ பி. ஜே. ரி. இராசநாயகம் அவர்களின் சிரேஷ்டபுதல்வரும், வண. பி. வில்லியம் யேசுதாசன் சுவாமியவர்களின் சகோதரர்புதல்வருமான வண. அன்ரன் திலகரட்ணம் இராசநாயகம், Mis. Ap. சுவாமியவர்கள் தமதுஜனனபதி வந்துசேர்ந்து நிகழும் ஆவணிமாதம் 19-ந்திகதியாகிய வருகிறசெவ்வாய்க்கிழமை காலை 7-30மணிக்கு யாழ்ப்பாணத்திலே முதன்முறையாகப் பரிசுத்த கொஞ்சேஞ்சி மாதாவின் ஆசனக்கோவிலிலே பெரியபாடற்பூசை நிறைவேற்றவிருக்கின்ருர். அன்றுபிற்பகல் 5மணிக்குச் ஸ்ரீமதி இராசநாயகம்அவர்கள் சம்பத்திரிசியார்கல்லூரி வீதியிலுள்ள தமதுஇல்லத்திலே தம்முடைய குருபுதல்வருக்கு ஓர்வரவேற்பு உபசாரம் நிகழ்த்தவிருக்கிருரென அறிகின்ருேம்.

### பிக்குவின் பாராட்டுரை

நீர்கொழும்பிலே கொச்சிக்கடையில் சென்ற 7-ந்திகதிநடைபெற்ற கூட்டம்ஒன்றிலே கனம் புன்னேபோலசரணதிஸநாயக தேரோஎன்ற புத்தபிக்குபேசியபோது, "கத்தோலிக்கஸ்தாபனங்களும், கிறீஸ்துவநம்பிக்கையுள்ள ஏனையசமயபாடசாலைகளும் கல்விக்குச்செய்துள்ள சேவையைப் பாராட்டவேண்டியது நமதுகடமை; ஆசியாவில் எந்தநாட்டைக்காட்டிலும் இலங்கையிலே படித்தவர்களின் விகிதாசாரம் அதிகமாயிருப்பதற்கு இந்தக் கல்விஸ்தாபனங்களே காரணம்; அமைதியாகவும், திறமையாகவும் அவைகள் கல்விச்சேவை செய்கின்றன; சமயபாடசாலைகளை அரசாங்கம் எடுத்துக்கொள்ளுமானுல் அது கல்வித்தரத்தை வெகுவாகக் குறைத்துவிடும்" எனக்கூறலாயினர்.

### அர்ச். கிறிஸ்தோப்பரின் திருநாள்

பிரயாணிகள் பரலோகபாதுகாவலரான அர்ச். கிறிஸ்தோப்பரின்திருநாள் யாழ்ப்பாணம், பரிசுத்தகொஞ்சேஞ்சி மாதாவின் ஆசனக்கோவிலிலே சென்ற ஆடிமாதம் 27-ந்திகதி ஞாயிற்றுக்கிழமை முதன்முறையாகக் கொண்டாடப்படலாயிற்று. அன்றுசாயந்தரம் திவ்வியசற்பிரசாத ஆசீர்வாதம் அருளப்பட்டதும், கோவில்மைதானத்திலே திரளானமக்கள் கூடியிருந்த சமூகத்திலே லொறிகள், கார்கள், மோட்டர்சைக்கிள்கள், சைக்கிள்கள், வர்த்தகரதங்கள், மாட்டுவண்டிகள், கைக்கரத்தைகள்உட்பட 200வண்டிகள்வரை கட்டளைக்குரவர் வண. சி. ஜோண்மேரிசுவாமியவர்களால் ஆசீர்வதிக்கப்படலாயின. அவைகளை ஆசீர்வதிக்குமுன் சுவாமியவர்கள் திருநாளின் கருத்தையும், வண்டிகள் ஆசீர்வதிக்கப்படுவதன் நோக்கத்தையும் தெளிவாகவிளக்கலாயினர். ஆசீர்வதிக்கப்பட்டதும் அர்ச். கிறிஸ்தோப்பரை மகிமைப்படுத்துமாறு அரைநிமிஷநேரம் அவ்விரதங்கள் ஹோண்கள் இசைத்தும், மணிகள் அடித்தும் ஆர்ப்பரிக்கலாயின.

### கமத்தொழிலும் கோழிவளர்த்தலும்

"யாழ்ப்பாணம் பிறவூர் உத்தியோக முயற்சியினுல்தான் வளர்ச்சியடைந்ததென்று சொல்லுவதுதவறு; பிறவூர் வியாபார முயற்சியினுல்தான் யாழ்ப்பாணம் வளம்பெற்றது; அந்நிலை இனிமேல்வருமென எதிர்பார்ப்பதற்கில்லை; ஆகவே, இந்தமுயற்சியில் ஈடுபட்டிருந்தவர்களையெல்லாம் முல்லைத்தீவுக்குச்சமீபமான பிரமந்தைக்குளத்தில் குடியேற்றி அங்கே கமத்தொழிலிலும், கோழிவளர்ப்பதிலும் ஈடுபடுத்த எண்ணியிருக்கிருேம்; பொருளாதாரமந்தத்தைப்போக்கப் பலவழிகளைக் கையாளலாம்; அவற்றில் கோழிவளர்ப்பதையும் ஒன்ருகக்குறிப்பிடலாம்; இலங்கையிலே ஆண்டுதோறும் 60லட்சம்ரூபா பெறுமதியான கோழிமுட்டைகள் இறக்குமதியாகின்றன. உள்நாட்டிலே முட்டைகளைப்பெருக்கினுல் இந்தஇறக்குமதியைத் தடைசெய்துவிடலாம்" என்று யாழ்ப்பாண அரசாங்கஅதிபர் திரு. எம். ஸ்ரீகந்தா அவர்கள் யாழ்ப்பாணம், சிகறெற்புகையிலைச் செய்கையாளர் சங்கங்களின் சமாஜகூட்டத்தில் பேசியபோது கூறியிருக்கின்ருர்.


### விளம்பர விகிதம்

| | ரூ. ச. |
|---|---|
| நன்றியறிந்தஸ்தோத்திரம் ... | 2 00 |
| மரணஞாபகம் ஒரு அங். ... | 2 00 |
| ஓடர் நிசி ( Order Nisi ) இரண்டுமுறைக்கு ... | 10 00 |

மற்றும் விளம்பரங்களுக்குக் கடிதமூலமாகவோ, அன்றேல் நேரிலோ மனுப்பண்ணிக்கொள்ளவும்.

மனேஜர்,

அர்ச். சூசைமாமுனிவர் அச்சகம்,

யாழ்ப்பாணம்.


### நீக்கட்டும் அல்லது தூக்கிலிடட்டும்

சனப்பிரதிநிதிகள்சபையிலே பிரதமர்சமர்ப்பித்த தமிழ்மொழிஉபயோக மசோதாவை அரசாங்ககட்சியைச் சேர்ந்தவரும், மாவனல்லைத்தொகுதியின் பாராளுமன்ற அங்கத்தவரும், தலதாபன-கலாசார உதவிமந்திரியுமான திரு. சி. ஆர். பெலிகம்மன என்பார்மாத்திரம் அரசாங்ககட்சியிலிருந்தபடி எதிர்த்துவாக்களித்தார். அதனுல் இவரை அரசாங்ககட்சியிலிருந்து வெளியேற்றிவிடுவதெனச் சென்ற புதன்கிழமைநடைபெற்ற அக்கட்சியின் விசேஷகூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது. கட்சியின்முடிபுக்கிணங்க அவர்வகித்திருந்த உதவிமந்திரிபதவியையும் இராசிநாமாச் செய்துவிடும்படி கேட்கப்பட்டார். அங்ஙனம்செய்யத் தவறுமிடத்து, அவரைப்பதவியிலிருந்து வெளியேற்றும்படி கவர்னர்-ஜெனறலைப் பிரதமர்கேட்டுக் கொள்வாரெனவும் தெரிவிக்கப்பட்டது. இதனைஅறியவந்த திரு. பெலிகம்மன பத்திரிகைகளுக்கு விடுத்தஅறிக்கையிலே: தமிழ்மசோதாவுக்கு எதிராக நான் வாக்களித்தபோது, அதன்எதிரொலிகளைப் பிரதமர் அறிந்துகொள்ளாதபோதிலும் அதன்விளைவுகளை நான்அறிந்திருக்கிறேன்; என்னைஉதவிமந்திரி பதவியிலிருந்து வெளியேற்றும்படி கவர்னர்-ஜெனறலுக்குப் பிரதமர் யோசனைகூறுவாரென அறிகிறேன்; உதவிமந்திரி பதவியிலிருந்து என்னைநீக்கட்டும், அல்லது தூக்கில் இடட்டும்; இறுதியில்யார்தூக்கிலிடப்படப் போகிருரென்பதைப் பார்ப்போம்" எனத் தெரிவிக்கலாயினர். பிரதமரது கேள்வியின்பேரிலே கவர்னர்-ஜெனறல் உடனடியாக உதவிமந்திரிபதவியிலிருந்து இவரை வெளியேற்றும் உத்தரவைச் சென்ற வெள்ளிக்கிழமை அனுப்பிவைத்தாரெனத் தெரியவருகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தாம் ஓர் கிறிஸ்துவர்தானா?

(சென்றவாரத் தொடர்ச்சி)

"...உடனே கிறிஸ்துவேதத்தை மறுதலித்துத் தாம் ஓர்கிறிஸ்துவன் அல்லவென்று என்முன்பாக ஆணையிட்டுச்சொல்லும்; தமக்குப் பெரும் வெகுமானங்கள்செய்ய எனதுபொக்ஷசாலை இதோ! திறந்தபடியே இருக்கிற"தென்று அரசன்கூறிய மொழிகளைக்கேட்ட தியஸ்பிரபு அமைதியே குடிகொண்டவராய் அரசவெகுமானங்களை அறவே விரும்பாதவர்போல் அலட்சியமாக அவனைவிழித்து, "அரசே! ஓர்கிறீஸ்துவனாகிய எனக்குத் தமது உலகவெகுமானங்களைக்காட்டிலும் உந்நதவெகுமானங்கள் உண்டு; தமது பொக்ஷசாலையைக்காட்டிலும் அதிகம்உச்சிதமான — கொடுக்கக் கொடுக்க ஒருபோதுமேகுறையாத — விலைமதிக்கமுடியாத ஓர்பொக்ஷசாலை உண்டு; அதனால்நான் கைக்கொண்ட கிறிஸ்துவேதத்தை ஒருநாளுமே கைவிடப்போவதுமில்லை; நான் ஓர்கிறிஸ்துவன் அல்லவென்று மறுத்துச் சொல்லப் போவதுமில்லை" என்று பணிவாகமொழிந்தார்.

பழுக்கக்காய்ச்சிய இரும்புக் கோலைக் கன்னதுவாரங்கள் இரண்டிலும் செலுத்தியவாறுய் இந்தக்கர்ணகடூரமான வார்த்தைகள் அரசன்செவிக்கேறவே, அவன் தனதுகண்கள் இரண்டிலும் கோபாக்கினிப் பொறிகள்பறக்க, உதடுகள் துடிதுடிக்க, உடல்படபடக்க அடங்காக்கோபம்அடைந்தவனாய்த் தான்வீற்றிருந்த ஆசனத்தைவிட்டெழுந்து, "பிரபோ! தம்மை ஓர் பெரியபிரபுவென மதித்துவந்த என்னை இன்று தமது பரமஎதிரியாக்கிக் கொண்டீர்; நன்று, நன்று, தமது வாழ்வும், தாழ்வும் இந்தநாட்டுமன்னனாகிய என்கையில்தான் இருக்கிறது என்பதைத் தாம்அறியீர்போலும்; ஒன்றில்தாம் கிறிஸ்துவேதத்தை மறுதலிக்கவேண்டும்; அன்றேல் தமது ஆருயிரை இழக்கவேண்டும்; இரண்டிலொன்றைத் தெரிந்துகொள்ளும்; வாழப்போகின்றீரா? அன்றேல் மாளப்போகின்றீரா?" என்று கோடையிடிபோல் கோஷித்துநின்றான்.

அப்போது பெரும்வேதவைராவியான தியஸ்பிரபு அணுவத்தனையுமே கலங்காமனத்தினராய் அரசனை வணங்கி, "பெருமானே! தமக்காக— என்தாய்நாட்டுக்காக — எனது ஜப்பானியசாகியத்துக்காக அவசியமேற்படும்போது, எனதுபிராணனைத் தியாகஞ்செய்ய என்றைக்குமே நான் தயாராயிருக்கிறேன்; ஆனால், என்தேவனும், இரட்சகருமாகிய யேசுபெருமானுக்காகவோ எனதுபிராணனைத் தியாகஞ்செய்ய அதிலும்பதினாயிரமடங்கு தயாராயிருக்கிறேன்; இறைவ! நான் உண்மையைத்தான் சொல்லுகிறேன்; நான் மெய்யெனக்கண்டு கையேற்றுக்கொண்ட கிறீஸ்துசமயத்திற்குமாறாக — என்மனச்சாட்சிக்குமாறாக யாதொன்றுஞ்செய்ய என்னால்முடியாது; கிறீஸ்துவர்களுக்கு மரணம்என்பது நித்தியசீவியத்தின திறவுகோலாய் இருக்கிறது" என்று மெதுவாகப் பகர்ந்தார்.

இதைக்கேட்டதும் புண்ணிலே புளிபற்றியவாறுய் மன்னன் அகோரசினங்கொண்டவனாய் ஓர்கால்பிரபுவை ஏறிட்டு விறைக்கப்பார்த்தான். இடங்கண்டுதான்— இளக்காரங்கண்டுதான் இந்தப்பிரபு என்னைமிஞ்சப்பார்க்கிறார்; ஆகட்டும், அவரை ஒருகை பார்க்கிறேன்; வழிக்குவந்து அடிவணங்கச் செய்கிறேனென்று தனக்குள்எண்ணிக்கொண்டு, "பிரபுவே, நீர் மரணத்துக்கு அஞ்சமாட்டீர்தானா? சரி, உயிருக்காகத் தம்மைக்கெஞ்ச வைக்கிறேன்" என்று வெறிகொண்டவன்போல் உரைத்து, தன்முகத்துக்கு முன்னே நிற்கவேண்டாமெனக் கர்ச்சித்து, அரண்மனையினின்றும் அவரை வெளியேறச்செய்தான்.

அரண்மனையினின்றும் வெளியேறிய தியஸ்பிரபு போரிலே வெற்றிமாலைசூடிய ஓர்வீரர்திலகம்போல் தமதுமனைபோய்ச் சேர்ந்தார். அரசனுக்கும், தமக்குமிடையே அரசமாளிகையில் நிகழ்ந்தவைகளையெல்லாம் ஆதியோடந்தமாய்த் தமதுபாரியாரிடம் எடுத்துக்கூறினார். அதனால்நாட்டின்கண் நடைபெறத்தொடங்கியுள்ள வேதகலாபனையிலே கிறீஸ்துவர்களான தம்மையும், தமது பிள்ளைகளையும் வேதத்துக்காகஅரசன் பழிவாங்கப் போகிறானென்று இருவரும் நிச்சயமாக உணர்ந்தார்கள். அதனால் அஞ்சாநெஞ்சுடன் அதற்குத்தங்களை ஆயத்தஞ்செய்ய முனைந்தார்கள்.

நிற்க, தியஸ்பிரபு தம்பதிகளுக்கு அழகேவடிவெடுத்தவாறுய்ச் சவுந்தரியமிக்க மூன்றுபிள்ளைகள் இருந்தார்கள். இவர்களில் மூத்தமகன் 16வயதுடைய சிமியோன். இளையமகன் 9வயதுடைய மத்தியாஸ் என்ற சிறுவன். இருவருக்கும் இடைப்பட்ட ஒரே மகள்தான் 13வயதுடைய மார்த்தீனாள். குணசீலர்களான— அதாவது நற்குண, நற்செய்கை யுடையவர்களான பிரபு தம்பதிகள்இருவரும் தருமநெறி குன்றாது, தங்கள்முன்னோரின் பெருமைநிலைகுறையாது தக்காரும், தகவிலர்தானும் நன்குமதிக்கச் சான்றோராய்வாழ்ந்து, தங்கள் சந்ததிவிளங்கும்படியாகச் சர்வேசுரன் தங்களுக்கு அருளத் தயைபாலித்த தவக்கொழுந்துகளாகிய பிள்ளைகள்மூவரையும் கண்ணின் கருவிழிகளைப்போன்று கருத்தாகப்பேணிக்காத்துத் தெய்வ பக்தியிலும், நல்லொழுக்கத்திலும், கல்விகேள்வியிலும் சிறப்பாக வளர்த்துவந்தார்கள்.

அவர்கள் வேதகல்வியை நன்கு பயின்று, வேதகடமைகளை நாள்தோறும் ஒழுங்காக அனுசரிக்கச் செய்து, தாங்கள் அடைந்துகொண்ட வேதவிசுவாசமாகிய ஞானதீபம் தங்கள்சந்ததியிலேமங்கிமறையாதுநிலைபெற்று இலங்கிக்கொண்டிருக்குமாறு ஆனபிரயாசையெல்லாம் எடுத்துவந்தார்கள். அதனால் தியஸ்பிரபுவின் குடும்பம் ஓர்உத்தம கிறீஸ்துவகுடும்பமாய்த் திகழ்ந்தது

நிற்க, ஜப்பானில் வேதகலாபனை ஆரம்பமானசெய்தி காட்டாக்கினிபோன்று நாடுமுழுவதும்பரந்தது. கண்டகண்டவிடமெல்லாமதேடிக் கிறீஸ்துவர்கள் கைதுசெய்யப்பட்டார்கள். வேதத்துக்காகச் சித்திரவதை செய்யப்பட்டார்கள். வேதசாட்சிகளாகப் பலர் கொலையுண்டார்கள். ஓர்பகுதியினர்தங்கள்ஊரைவிட்டுப்பிறதீவுகளுக்குத் தப்பியோடி அங்கேஇரகசியமாக வேதத்தை அனுசரித்துவந்தார்கள்.

அவ்வாறாக, அன்று தியஸ்பிரபுவை அரசன் அழைப்பித்துக் கூறியனுப்பிய சபதமொழிகள் இன்னுமேஅவர்செவிகளில் தொனித்துக்கொண்டிருந்தன. அதனால் அவரும், அவர்பாரியாரும், ஏன், அவர்களின் பிள்ளைகள்தானும் வேதத்துக்காக எதனையுமே— தங்கள் ஆருயிரைத்தானுமே தியாகஞ்செய்வதற்குத்தயாராய்த் தங்களைத்திடப்படுத்துவதிலும், தேவஒத்தாசையை இரந்துகொள்வதிலும் அல்லும்பகலும் அதிகம்கருத்தாயிருந்து தங்களுடைய முறையை எதிர்பார்ப்பவர்கள்போல் காணப்பட்டார்கள்.

அங்ஙனமாக, ஓர்நாள்காலை தாய்தந்தையர்இருவரும் தங்கள்பிள்ளைகளோடு மனையின்ஓர்புறமாக அமைந்துள்ள சிறியசெபகூடத்திலே முழந்தாட்படியிட்டு வழமைபோலப் பயபக்தியாகக் காலைச்செபம் சொல்லிக்கொண்டிருக்கும்போது, திடீரெனப் போர்வீரர்படையொன்று அவர்களின் மனையைச்சுற்றிவளைந்துகொண்டது. அதன்மேல் படைத்தலைவன் மனையுள் பிரவேசித்துத் தியஸ்பிரபுவைப் பார்த்து, "பிரபுவே, [illegible]

மகனை அழைத்துவரும்படியாக அரசகட்டளைபிறந்திருக்கிறது; அவன்கிறீஸ்துவேதத்தை மறுதலியாதேபோனால் சிறிதுவேளையிலே அரண்மனைவாயிலுக்குமுன்பாகவுள்ள அகன்றமைதானத்தில்வைத்துச் சுட்டெரித்துச் சாம்பராக்கப்படுவான்" என்று பயங்கர தொனியிலே ஆவேசங்கொண்டவனைப் போல் கர்ச்சித்தான்.

(தொடரும்)

# முப்பத்துமூன்றும் நாள்

1931-ம்ஆண்டு ஆனிமாதத்தில் ஓர் நாள். அன்று பாடசாலையில் எங்கும் ஒரேகுதூகலம். பலஆண்டுகளாகக் கல்விகற்றுப் பரீட்சையில்தேறிய யாவர்க்கும் அன்று வெகுமகிழ்ச்சி பொருந்தியநாள். தேறியவர்களிற் சிலர் மேற்படிப்புக்காகக் கல்லூரிக்குச் செல்லத் தீர்மானித்திருந்தனர். பெரும்பாலோர் வாழ்க்கையில் தங்களுக்குப் பயன்தரக்கூடிய ஓர்தொழிலைக்கற்றுக் கொள்ளத் தீர்மானித்திருந்தனர். இத்தகையோரில் ஒருபெண் பிள்ளையின் பெயர் மிரியம்.

அங்கிருந்த ஏனையோரைவிட இவள் வேறுவிதமாகக் காணப்பட்டாள். வாலிபவயதினள் என்றபோதிலும், துன்பதுயரங்கள்பட்டு அனுபவித்ததின் பயனாக அவள்முகத்தில் சாந்தமும், உறுதியும் காணப்பட்டன. அதன் காரணங்கள் பல. மூன்று ஆண்டுகளுக்குமுன் அவள்தாய் இறந்தாள். ஆறுமக்களைவிட்டுவிட்டு அவள் ஆண்டவன்பாதம் சேர்ந்துவிட்டாள். மிரியம்தான் மூத்தபெண். மற்றஐவருக்கும் அவள் தாயாகஇருந்து, குடும்பத்தைநடத்துவதில் தகப்பனுக்கு உதவியாய் இருந்தாள். தன்வயதுக்கு மேலான திறமையுடன் காரியங்களை நடத்திவந்தாள். அத்துடன் அவள் உயர்தரக்கல்வியும்கற்றுத் தேர்ச்சி பெற்றாள்.

அவள் படிப்பைமுடித்தபின் இரு ஆண்டுகளைக் குடும்பத்துக்காகவே செலவிட்டாள். அந்தக்காலமெல்லாம் அவள்உள்ளத்தில் ஒருஆவல்இருந்தது. தன்வாழ்க்கையைப் பிறருக்காய்ச் செலவிடுவதற்காக நேர்ஸ்வேலை பயில ஆசித்தாள். அவள்தங்கை சற்றுப் பெரியவளானாள். குடும்பத்தை இனிமேல் அவள் கவனித்துக்கொள்வாள். அதனால்மிரியம் தன்ஆவலைப் பூர்த்திசெய்துகொள்ளலாம். நேர்ஸ்வேலை பயில்வதற்காகக் கன்னியாஸ்திரிமார் நடத்திவந்த ஒருஆஸ்பத்திரிக் கல்லூரியில் தன்னைச்சேர்த்துக்கொள்ள விண்ணப்பித்தனள்.

வந்தபதிலைப் பார்த்ததும் அவளது மனம் உடைந்தது. படிப்பிலே வெகுதிறமை காண்பித்தவர்களையே கல்லூரியில் சேர்த்துவந்தார்கள். அவர்கள் எதிர்பார்த்ததிறமை மிரியத்திடம் இல்லை. ஆதலின் அவளை ஏற்றுக்கொள்ள முடியாதுஎன்றனர். கல்லூரியின்தலைவியை மிரியம் நேரில்போய்க் கண்டாள். வீட்டுவேலைகளையும் கவனித்துக்கொண்டு கல்விகற்கவேண்டியிருந்ததைப்பற்றித் தலைவியிடம்கூறினாள். ஆனால், பயனில்லை. "எங்களுக்குத் தேவையானமாணவிகள் சேர்ந்துவிட்டார்கள். இனிஒன்றுஞ் செய்ய முடியாது" எனக் கல்லூரித்தலைவி கூறிவிட்டாள். வேறுஆஸ்பத்திரிக் கல்லூரிகளில் அவள்எளிதாகச் சேரலாம். ஆனால், அவளுக்குப் பிரியமில்லை. இந்தக்கல்லூரி கத்தோலிக்கருடையது. திறமைவாய்ந்த கன்னியாஸ்திரிமாரால் நடத்தப்பட்டுவருவது நல்லபயிற்சியும் கிடைக்கும்.

அவள்வீட்டில் வயதுசென்றதாத்தா ஒருவர் இருந்தார். அவர் நோய்வாய்ப்பட்டுப் படுக்கையில்கிடந்தார். அதிக பக்தியுள்ளவர். எப்பொழுதும் செபமாலை செபித்துக்கொண்டிருப்பார். எல்லாவற்றையும் உத்தரிக்கிறஸ்தல ஆத்துமாக்களுக்காக ஒப்புக்கொடுப்பார். மிரியம் தனதுதுயரத்தை அவரிடம்சொன்னாள்.

"அம்மா, கவலைப்படாதே. கடவுள் நல்லதகப்பன். கடைசியில்எல்லாம் நன்றாகவந்துமுடியும். உத்தரிக்கிறஸ்தலத்தில் வேதனைப்பட்டு அந்தரிக்கின்ற ஆத்துமங்களுக்கு ஆறுதலாக நான்சொல்லுகிறபடிசெய். "முப்பத்துமூன்றுநாள் பத்திமுயற்சி" என ஒன்று இருக்கிறது. அதை நாளையேதொடங்கு. அதற்கு நீசெய்யவேண்டியது அதிகமல்ல. உத்தரிக்கிறஸ்தல ஆத்துமங்களின் வேதனையைக்குறைக்கத் தொடர்ச்சியாக முப்பத்துமூன்றுநாட்களுக்கு ஒவ்வொருநாளும் திவ்வியபூசைகாணவேண்டும். சிலுவைப்பாதை செய்யவேண்டும். ஒவ்வோர் செபமாலை சொல்லவேண்டும். இந்தப் பத்திமுயற்சி எனக்கு மிகஉதவியாய் இருந்தது. மோட்சத்தில்உள்ள அர்ச்சியசிட்டர்கள் பெற்றுத்தராமற்போன உபகாரங்களை இந்தப்பத்திமுயற்சியால் நான் பெற்றிருக்கிறேன்" எனத் தாத்தாகூறினார்.

மிரியம் மறுநாளே இந்தப்பத்திமுயற்சியை நம்பிக்கையுடன் தொடங்கினாள். இருபத்துநான்காம்நாள் அவள்திரும்பவும் ஆஸ்பத்திரிக் கல்லூரி சென்று தன்னை அதில்சேர்த்துக்கொள்ள இன்னுமொருமுறை விண்ணப்பஞ்செய்தாள். கல்லூரித்தலைவி அன்று அங்கில்லை. அந்தவிண்ணப்பத்தைக்கொடுத்தாலும் பயனிராதுஎன்று அவள் துணைவி சொல்லிவிட்டாள். மிரியம் அதைரியம்கொள்ளாது, "நான் வந்தேன் என்று தலைவியிடம் தயவுசெய்து தெரிவியுங்கள். ஒருவேளை தனது மனதைமாற்றி என்னைஏற்றுக்கொள்ளலாம்" எனச் சொல்லிச்சென்றாள். அன்றுமாலை தலைவி திரும்பினாள். மிரியம்வந்துவிட்டுச் சென்ற செய்தியைத் துணைவியிடமிருந்து அறிந்ததும் "அவள்காட்டிய திறமைபற்றாது; இப்படிப்பட்டவர்களை நாம்ஏற்றுக்கொண்டால் நமது கல்லூரிக்குள்ள மதிப்புக் குறைந்துவிடும்" என்று தலைவி சொல்லிவிட்டாள்.

இன்னும் சிறிதுவேளை அவள் யோசித்துப்பார்த்துவிட்டு மிரியத்தைப்பற்றிய குறிப்போட்டை எடுத்துவரச்சொன்னாள். இருகன்னியாஸ்திரிமாரும் அதைக் கவனமாய் வாசித்தார்கள். "வீட்டுவேலைகளையும், தம்பிதங்கையரையும் கவனித்துவரும்போதே அவள் படிப்பில் அவ்வளவுதிறமை காண்பித்திருக்கிறாள்; இப்பொழுது அந்தக்கவலையே கிடையாது; நேர்ஸ்பயிற்சியில் தீவிரமாக முன்னேறுவாளென்று நினைக்கிறேன்; அவள்பெற்றுள்ள அனுபவமும் அதிகபயன்தரும்; அவளைக் கல்லூரியில் சேர்த்துக்கொண்டதாக இன்றேஅவளுக்குத் தெரிவித்துவிடுங்கள்" எனத் தலைவிகூறினள்,

கடிதம்போய்ச் சேரும்போது மிரியம் அதுவந்த விலாசத்தில் இல்லை. அது அவள்கையில்கிடைக்க ஒருவாரம் ஆகிவிட்டது. என்றாலும், உடனேகல்லூரிக்கு விரைந்தேகினாள். தலைவியைக்கண்டுபேசித் தன்பெயரைப்பதிவுசெய்துகொண்டாள். எல்லாம் முடிந்ததும், தாத்தாகூறிய யோசனையைப்பற்றி மிரியம் தலைவியிடம்தெரிவித்து, உத்தரிக்கிறஸ்தல ஆத்துமங்களுக்காகத் தான்தினந்தோறும் திவ்வியபூசைகண்டு சிலுவைப்பாதை செய்து, செபமாலை சொல்லிவந்ததை எடுத்துரைத்தாள். "சகோதரி! இன்றுதான் முப்பத்துமூன்றாம்நாள். இன்றுதினம் நான் இன்னும் சிலுவைப்பாதைசெய்யவில்லை. என்வாக்குறுதியை முற்றும் நிறைவேற்றி முடிக்கவேண்டும். இவ்வளவு நன்றாக யாவரும்பார்க்கக்கூடிய விதமாய் எனக்குஉதவி செய்துள்ள உத்தரிக்கிறஸ்தல ஆத்துமாக்களுக்காக உங்கள் கோவிலில் சிலுவைப்பாதை செய்யலாமா?" என மிரியம் கேட்டாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# புனிதவீரர் பக்கம்



அருமைச் சகோதரங்களே!

லூர்துதிருப்பதியிலே இம்மாதம் ஒரு விசேஷ வைபவம், ஆவணி 15-ம் நாள் தொடக்கம் புரட்டாசி 15-ம் நாள்வரை தொடர்பாகப் பூசைப்பலி நடக்கும். இப்படி முன்னொருமுறை நடந்தது. உலக ஈடேற்றத்தின் ஞாபக நூற்றாண்டுவிழா நடைபெற்றபோது லூர்து பதியிலே மூன்றுநாட்களாக இடையீடுஇன்றிப் பூசைப்பலிகள் நடந்தேறின.

இம்முறை நடந்தேறவிருக்கும் 30 நாட் பூசைப்பலி வைபவத்தின் நோக்கம் என்ன? திருச்சபை பல இடங்களில் நெருக்கிடைப்படுகிறது. ஞானஆயரும், மந்தைகளும் தங்கடமை செய்ய இயலாது அங்கலாய்க்கின்றனர். இந்நிலை ஐரோப்பியநாடுகளில் மாத்திரமல்ல, சீனு, கோறியா, வியெற்னும் போன்ற ஆசியநாடுகளிலும் உண்டு. இந்நிலை மாறி, திருச்சபை சுயாதீனம் அடையவேண்டும். ஆகவே தான் இந்தப் பலிகள் ஒப்புக்கொடுக்கப் பெறுகின்றன.

நீங்களும் அவ்வைபவத்தில் சேரவேண்டாமா? உங்களால் இயன்றளவு அந்நாட்களில் திவ்வியபூசைக்குச் சமுகமளியுங்கள். உலகமெங்கும் திருச்சபை தன்பணியை நிறைவேற்றச் சந்தர்ப்பம் அடையவும், கலாபனைகளை அனுபவிப்போர் விடுதலை பெறவும், ஆசியநாடுகளில் தலையெடுத்திருக்கும் தேசப்பற்று நியாயமானதாக இருப்பதினுல், திருச்சபையின் வளர்ச்சிக்குத் தடைசெய்யா திருக்கவும் வேண்டுங்கள்.

அண்ணை

—※—

## பளிங்குக் கட்டடம்

திருவாட்டி எட்வின் மொனிக்கா பெருத்த தனவந்தி. பணத்திலேயே பிறந்து, பணத்திலேயே வளர்ந்தவள். குறையென்பது அவளுக்குக் கிடையவே கிடையாது. சகலவித பாக்கியங்களும் சம்பூரணமாய் நிறையப்பெற்றுச் சந்தோஷமாய் வாழ்ந்துவந்தாள். அவளுடைய மாளிகை கண்கவர் வனப்பும், வானளாவிய தோற்றமுங் கொண்டது. அதனைச் சுற்றி நறுமலர்ச் செடிகளும், விதம் விதமான பழங்கள் பழுத்துத்தொங்கும் மரங்களும்நிறைந்த பூங்கா ஒன்றிருந்தது. சுருங்கக்கூறின், அவளுக்குச் சரிநிகர் சமானமானவர்கள் அவ்வூரிலே கிடையாது.

இவ்வித இன்பங்களையெல்லாம் சுகித்துவந்த பெருமாட்டியின் குணம் சற்றுக் கோணலானது. செல்வச்செருக்கு அவளது குண விசேடத்தில் முக்கியமானது. கோயில் குளமென்ருல் கட்டோடு பிடிக்காது. ஏதோ ஒன்றிரண்டு ஞாயிற்றுக்கிழமைகளில் வேண்டாவெறுப்பாய்க் கோயிலுக்குப் போய்விட்டு வந்துவிடுவாள். சத்திய வேதாசாரங்களோ அவளிடம் குறைவுதான்.

சுந்தரம் என்பவன் அப்பெருமாட்டியின் தோட்டக்காரன். அவனது குணத்திற்கும், அம்மாளின் குணத்திற்கும் ஏணி வைத்தால்கூட எட்டாது. நல்லவன் என்ருல் சுந்தரத்தைத்தான் சொல்லவேண்டும். கடவுளிடத்தில் உறுதியான பக்தி விசுவாசங் கொண்டவன். இது இப்படியிருக்க,

ஒருநாள் இரவு பெருமாட்டி நித்திரை மயக்கத்திலிருந்தாள். நல்ல நித்திரை. திடீரென அவ்வறையில் சோதிக்கதிர் ஒளியொன்று புறப்பட்டது. ஓர் தேவதூதன் அவள் அருகில் வந்துநின்ருர். அவளைத் தனது இரக்கையில் அமருமாறு பணித்தார். மொனிக்காவும் அவ்வண்ணஞ் செய்யவே, சம்மனசானவர் ஆகாயவீதியில் பறந்து சென்ருர். இருவரும் அழகுவாய்ந்த ஒரு பளிங்குக் கட்டடத்தின் முன் வந்து நின்ருர்கள்.

"ஆகா! எவ்வளவு அழகான கட்டடம்; இது யாருடையது?" என்று வியப்புடன் தேவதூதனை நோக்கிக் கேட்டாள் மொனிக்கா.

"உனது தோட்டக்காரனுடையதுதான்" என்ருர் தூதன்.

"என்ன! என்தோட்டக்காரனுக்கா?—அந்தப்பயல் சுந்தரத்துக்கா? ஒருபோதுமிருக்காதே! இவ்வளவு பெரிய அழகான கட்டடம் அவனுக்கேது? அவன் பரம ஏழையாயிற்றே!" என்ருள்.

"எப்படியிருந்தாலும் இது அவனுடையதுதான்." என்ருர் தூதன்.

பின்னர் இருவரும் வேருெரு கட்டடத்தின் முன் வந்தார்கள். அக்கட்டடம் சிறியதாயும், பார்வைக்கு அவலட்சணமாயும் சோபையற்று விளங்கிற்று. அதைப் பார்த்தால் வீடென்று சொல்வதற்கில்லை.

"இது யார் வீடு?" என்று கேட்டாள் பெருமாட்டி.

"ஏன்? உன்னுடையது தான்" என்ருர் தூதன்.

"என்ன! என்னுடையதா? உமக்கென்ன சித்தப்பிரமை பிடித்துவிட்டதா? அழகான பளிங்குக் கட்டடத்தில் நான் வசிக்கக்கொள்ள, இது எப்படி என்வீடாகும்?"

"சந்தேகமின்றி இது உன் வீடுதான்; நீ அனுப்பிய சாமான்களைக் கொண்டு உன் வீடு கட்டப்பட்டது; உன் தோட்டக்காரன் அனுப்பிய சாமான்களைக்கொண்டு அவனது வீடு கட்டப்பட்டது; அவன் அழகான பளிங்குக் கற்களையும், நவரத்தினங்களையும் அனுப்பினுன்; நீயோ வெறும் மண்ணைத்தான் அனுப்பினுய்; இதோ உன்வீடு மண்ணுல் சமைக்கப்பட்டு, உருக்குலைந்து கிடக்கிறது" என்ருர் தேவதூதன்.

பெருமாட்டி மொனிக்கா திடுக்கிட்டு விழித்தாள். அவள் கண்ட கனவு அவள் மனதைக் கண்ணில் கிடக்கும் துரும்புபோல் உறுத்திற்று. அன்றே தான் கனவில் கண்ட தன்னுடைய தோட்டக்காரன் வீட்டைப்போல் தானும் ஒரு மாளிகை கட்டத் தீர்மானஞ் செய்து கொண்டாள்.

பாலர்களே! நீங்கள் எவ்வித கட்டடம் நிர்மாணிக்கப்போகிறீர்கள்?

— ச. ஞா. தூ.

## சரியான பாடம்

"நான் படம்பார்க்கப் போகத்தான் போகிறேன்" என்று அடம் பிடித்தான் மரியதாஸ். ஏன்டா, அடுத்த வாரம்தான் போவேன்; வானம் இருண்டு கிடக்கிறது; நாடு இருக்கிற நிலையும் உனக்குத் தெரியாதாடா? என்ருள் மரியதாசின் தாய். அன்று ஞாயிற்றுக்கிழமை. ஆகையால், மாட்டின் சுவாமியார் படம் காட்டுவார் அதைப் பார்க்கத்தான் போகப் போகிறேன் என்று மரியதாஸ் அடம் பிடித்தான். கடைசியாக மரியதாஸ் தாயின் சொல்லைக் கேளாமல் படம் பார்க்கக் கையிலிருந்த பணத்துடன் ஓட்டமும், நடையுமாகப் படம் காட்டும் இடத்தை நோக்கிச் சென்றுகொண்டிருந்தான். இடி இடித்தது. மின்னல் மின்னியது. மழை 'சோ' என்று பெய்ய ஆரம்பித்தது. உடனே மரியதாஸ் வழியிலிருந்த கடைக்குள் புகுந்துகொண்டான். மழையும் முழுமூச்சாக விடாமல் பெய்துகொண்டே இருந்தது. அப்போது ஊரடங்கும் சட்டம் நடைமுறையில் இருந்த காலம். நேரமும் ஆறுமணியை நெருங்கிக்கொண்டிருந்தது. ஆதிகாலத்து அந்தக் கடிகாரமும் 'டாங் ... டாங்' என்று ஆறுமுறை அடித்து ஓய்ந்தது. கடைக்காரன் கடையைப் பூட்டுவதற்காக மரியதாசைப் பிடித்து வெளியே தள்ளினுன். உடனே மரியதாஸ் "ஐயா! தயவுசெய்து என்னை வெளியே தள்ளாதீர்; இன்று என்னை இங்கே தங்க விடுங்கள்" என்று கெஞ்சிக் கேட்டுக்கொண்டான். கடைக்காரனும் மனமிரங்கி ஒரு நிபந்தனையின்பேரில் சம்மதித்தான். நிபந்தனை கஷ்டமானது. எச்சில் தட்டுகளையும், மற்றும் பாத்திரங்களையும் கழுவவேண்டும். இதுதான் நிபந்தனை. எச்சில் தட்டுகளும், மற்றும் பாத்திரங்களும் அவனிடம் கழுவக் கொடுக்கப்பட்டன. வீட்டிலே தான் சாப்பிட்ட பாத்திரத்தையே கழுவாதவன் இங்கே பிறர் சாப்பிட்ட பாத்திரங்களைக் கழுவ வேண்டியதாயிற்று. என்ன செய்வான் பாவம்! வீட்டில் பஞ்சு மெத்தையில் இரண்டு போர்வையுடன் தலையணைபோட்டுப் படுக்கும் மரியதாஸ் இங்கே குளிர்ந்த தரையில் நனைந்த உடையுடன் படுக்க வேண்டியதாயிற்று. இவையெல்லாம் தாய் சொல்லைத் தட்டியதால் தானே.

— தியாகராஜ்

—※—

தேவ ஊழியம் புரிய

### ஆசையா?

(1) அடிக்கடி தேவ நற்கருணை, பச்சாத்தாபம் ஆதிய தேவதிரவிய அனுமானங்களைக் கைக்கொள்.

(2) தேவதாயின் பாதுகாவலைத் தேடி அடிக்கடி வேண்டிக்கொள்.

(3) பரிசுத்த ஆவியானவர் உன்னை வழிநடத்த வேண்டுமெனக் கேட்டுக்கொள்.

இவை தேவ ஊழியப் பற்றை வளர்க்கும் என்பது திண்ணம்.

---

பத்து எழுத்துக்கொண்ட

### ஓர் அர்ச்சியசிட்டரின் பெயர்

தொப்பியில் உண்டு,
செருப்பில் இல்லை.
கரும்பில் உண்டு,
இனிப்பில் இல்லை.
கருமையில் உண்டு,
வெள்ளையில் இல்லை.
சொல்லியதில் உண்டு,
சொல்லாததில் இல்லை.
கப்பலில் உண்டு,
வத்தையில் இல்லை.
போகையில் உண்டு,
வருகையில் இல்லை.
அவஸ்தையில் உண்டு,
ஆபத்தில் இல்லை.
தம்பியில் உண்டு,
அண்ணனில் இல்லை.
பல்லக்கில் உண்டு,
பயணத்தில் இல்லை.
பர்மாவில் உண்டு,
இந்தியாவில் இல்லை.

விடை:— ர்லதஸ்போப்யமைம்தொ.

— R. பெனடிற், எழுவைதீவு.

## பழுவாகத் தோன்றிய சிலுவை

இரண்டாவது உலகயுத்தத்தின் போதுபிரித்தானியபிரதமர் சேர்ச்சில் அவர்கள் தாம் சுமக்கவேண்டியிருந்த பலசிலுவைகளுள் லொறேய்ன் சிலுவையே மிகவும பழுவாயிருந்ததென்று முறையிட்டதாக 'மெய்ல்' பத்திரிகை (28-5-58) கூறுகிறது. லொறேய்ண் சிலுவைஎன்பது ஜெனறல் தெகோலின் 'சுதந்திர பிரான்ஸ்' இயக்கத்தினர் தங்கள்சின்னமாகத் தெரிந்து கொண்ட இரட்டைக்குறுக்குச் சட்டமுள்ள சிலுவையாகும. அப்போது சுதந்திர பிரான்ஸ் இயக்கத்திற்குப் பிரித்தானிஆதரவு அளித்துவந்தது. ஆயினும், ஜெனறல் தெகோலுக்குத் திருப்தியளிக்கத் தக்கவகையில் நடந்து கொள்வது பிரித்தானிய அரசாங்கத்துக்கு மிகவுங் கஷ்டமாயிருந்ததாம். ஜெனறல் தெகோல் அதிகஉரோசமுள்ளவராம். சொற்பகுறைகளையெல்லாம் பெரியகுறைகளாகப் பாவித்துக்கொள்ளும் மனப்பான்மையுடையவராம். இதனுல்தான் சேர்ச்சில் அவ்வாறுகூற நேர்ந்ததாம். அனுல், அவர் இப்பொழுது அதிகாரபீடத்தில் இல்லை. மற்ருெருவர் பிரித்தானிய பிரதமராயிருந்துவருகிருர். இன்றுள்ள பிரித்தானியமந்திரிசபையானது தற்சமையம் பிரான்சில் ஜெனறல் தெகோல் பிரதமராகி நிர்வாகஞ்செய்ய முன்னுக்கு வந்திருப்பதுபற்றி என்ன அபிப்பிராயம் கொண்டிருந்த போதிலும், இரண்டாவது உலகயுத்தம் முடிந்ததிலிருந்து நிலையான அரசாங்கம் இல்லாமல் தடுமாறிக் கொண்டிருந்த பிரான்ஸிலே ஒருஆறுமாதத்திற்காவது கட்சிப்பூசல் இல்லாத பலமானஓர்ஆட்சி இருந்துவருவது பிரான்சுக்கு மட்டுமல்ல, உண்மையில் ஜனநாயகத்தைக் காப்பாற்ற விரும்பும் நாடுகளெல்லாவற்றிற்குமே நன்மைபயக்கும்என்பதில் சந்தேகமில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்ப்பாணம்

## அர்ச். ஆரோக்கியநாதர் திருநாள்

இத்திருநாட் கொண்டாட்டம் நிகழும் ஆவணிமாதம் 16-ந்திகதி சனிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி, 27—ந்திகதி புதன்கிழமை முடிவாகும்

C. யோண்மேரி, O. M. I.,
கட்டளைக்குரவர்.

முகமாலை

## அர்ச். பிலோமினம்மாள் திருநாள்

முகமாலைப்பதியில் அர்ச். பிலோமினம்மாள்திருநாள் வழமைபோல் இவ்வருடமும் ஆவணி 12-ம் திகதி ஆரம்பமாகி, 24-ம் திகதி முடிவடையும்.

கட்டளைக்குரவர்,
நல்லூர்மீசாம்.

## அந்தியவேளை குருவானவரைத்தேடிய கம்யூனிஸ்த தலைவர்

யூகோசிலேவியநாட்டின் கம்யூனிஸ்த தலைவரான ஜிஜஎரோ சாலாஜ் என்பவர் அங்கு புல்மற்றியாநகரிலே சமீபத்தில் காலஞ்சென்ருர். ஓர்காலம்இவர் ஓர்பூசைப்பரிசாரகனாய் இருந்தவர். திருச்சபையின் சத்துராதியும், கம்யூனிஸ்த ஐக்கியதொழிற்சங்க ஸ்தாபன தலைவருமான 70வயதிடையஇவர் மரணப்படுக்கையில்இருந்தபோதுஓர்குருவானவரை அழைத்துவரும்படியாகக் கேட்டுக்கொண்டார். ஆனால், சாலாஜின் தோழர்களோ லொவ்றேன்என்ற சிறிய பட்டினத்துப் பங்குக்குருவானவரிடம் அவரதுவேண்டுகோளைத் தெரிவிக்க மறுத்துவிட்டார்கள். இவர் சொற்பகாலமாகத் தனக்குப் பெரும்வேதனையைத் தந்துகொண்டிருந்த பயங்கரமான ஓர்நோய்கண்டுவருந்திய அந்திய நாட்களில் இந்தச்சிறிய பட்டினத்தில் தான் வசித்திருந்தார். 1946-ம்ஆண்டு சாகிறெப்நகரிலே "மக்கள்நீதிமன்ற"த்தின்முன் பாகக் கருதினல் ஸ்ரீபினக் ஆண்டவர் விசாரணைசெய்யப் படுகையில் இந்தச்சாலாஜ்என்பவரின் ஆட்கள் நீதிஸ்தல சாலைக்குள்பிரவேசித்து "ஸ்ரீபினக்குக்குச் சாவு" என்று கூச்சலிட்டு ஆர்ப்பரித்தார்கள்

ஐக்கியதொழிற்சங்க தலைவராயிருந்த காலத்திலே இவர் தனக்குள்ள அதிகாரமிக்கபதவியை அபாவனைசெய்து, மேற்றிராணிமாரையும், குருமாரையும் கலலால்எறியவும், மற்றும் அநேகபெருந்தொகையான குருமாரின்வாழ்க்கைக்குத் தாங்கமுடியாத இம்சைகள்செய்யவும் டல்மற்றியாவிலுள்ள தொழிலாளருக்குக் கட்டளைவிடுத்துக்கொண்டிருந்தார். திருச்சபையின்மட்டில் தான் கொண்ட குரோதத்தினுல் கண்கெட்டவனைப்போன்று மதிகேடாய் நடந்துகொண்டதாய் இப்போதுதான் உய்த்துணர்வதாகவும், தான் செய்தவைகளுக்கெல்லாம் இப்போது மனஸ்தாபப்படுவதாகவும் தான்மரிக்குமுன் இவர் தனதுநண்பர்கள்சமுகத்தில் அறிக்கையிட்டாரென்று டல்மற்றியாவின் கடற்கரைத்துறைமுகமாகிய றிறெக்காவிலிருந்து றீயெஸ்றநகரிலே செய்தி கிடைத்துள்ளது. தன்னை மன்னிக்கும்படியாக இவர் கருதினல் ஸ்ரீபினக் ஆண்டவரையே விசேஷவிதமாகக் கேட்டுக்கொண்டார். ஜிஜஎரோ சாலாஜ் ஓர்கத்தோலிக்கனுக வளர்க்கப்பட்டுவந்தார். ஆனுல், ஓர்மாக்ஸியனுனபிறகு திருச்சபையுடன் தனக்கிருந்ததொடர்புகளை நீக்கிக்கொண்டார்.

### நன்றித்துதி

பிறேக்நகர திவ்விய பாலகயேசுவின் இரக்கத்தினுல் யான்அவரிடம் இரந்து கேட்டகருமம் அனுகூலமானது. அவருக்கு என்றைக்கும் மிகவும் நன்றியுள்ளவனுக இருப்பேன். நேர்த்திப்படி பிரசுரிக்கிறேன். உபகாரி

## செப உதவி

நிகழும்மதி 20-ந்திகதி புதன்கிழமை காலை 8மணியளவில் முகமாலை, அர்ச். பிலோமினம்மாள் கோவிலில் எனது சிரேஷ்டபுத்திரனுகிய மரியாம்பிள்ளை ராசாவுக்கும், மிருசுவில், திரு. கே. கே. செபஸ்தியாம்பிள்ளை ஆசிரியரின் சிரேஷ்டபுத்திரியாகிய மேரிபிலோமினு அற்புதத்துக்கும் மெய்விவாகத் திருச்சடங்கு நிறைவேறும். அன்றுதினம் வண. குருப்பிரசாதிகள், சங். சந்நியாசர், சங். கன்னியாஸ்திரிமாரையும், நம்மையறிந்த உடன்ஆசிரியர்களையும், நம்மிடம் கல்விகற்ற மாணவர்களையும் தத்தம்கோவில்களில் பூசைகண்டு, திருவிருந்தருந்தி, இப்புதியகுடும்பத்துக்கு நிறைந்தவரப்பிரசாதங்களைக் கடவுள்ஈந்தருள மன்றுடும்படி தாழ்மையாய்க் கேட்டுக்கொள்ளுகிறேன்.

S. MASSILLAMANY,
Retd. Teacher,
No. 50, Beach Road,
Passaiyoor,
JAFFNA.

### திரு. சந்தியா தியஸ்ஸின் தேகவியோகம்

பேசாலையிலே பலராலும் நன்கறியப்பட்டவராய், ஓர்நல்லகத்தோலிக்காராய், உயர்ந்தபண்புகள் உடையவராய் விளங்கியிருந்த திரு. சந்தியா தியஸ் அவர்கள் ஒருவருடகாலமாக நோயினுல்வருந்திச் சென்ற 25-ந்திகதி வெள்ளிக்கிழமையன்று காலஞ்செல்லலாயினுரென்னும் துயரசெய்தி பலரையும் துயரிலாழ்த்தியது. மன்னுர்மேற்குக் கிராமச்சங்கத்தின் இணையற்றதலைவராய்ப் பத்துவருடங்களுக்குமேலாக இவர் ஆற்றியதொண்டு அளவற்றது. இச்சங்கத்தின் எல்லைக்குட்பட்ட கிராமங்கள் பலஉதவிகளை அரசாங்கத்திடமிருந்துபெற்று அபிவிர்த்தியடைய இவரே காரணராயிருந்தார். இவரின் பிரேதமானது மன்னுர்மாவட்டத்திலுள்ள பிரமுகர்கள், அன்பர்கள், உற்றுர்உறவினர் கூடியிருந்தசமுகத்தில் வண. எஸ். கருணுகரர்சுவாமியவர்கள் துக்கசங்கீதமிசைத்துச்செல்ல, முந்தக் கோயிலிலும், பிந்தச்சேமக்காலையிலும் ஆசீர்வதிக்கப்பட்டு நல்லடக்கம் செய்யப்படலாயிற்று. இவரை இழந்துவருந்தும் பிரியசகோதரர், புத்திரர் புத்திரிகள், உறவினருடன் நாமும்அனுதாபப்படுகின்றேம்.

R. I. P.

— நிருபர்

### நன்றியறிந்த ஸ்தோத்திரம்

கடந்த ஒன்றேகால்வருடமாக எனது கணவருக்கு வேலையில்லாமல்போனதால் மனச்சந்தோஷமில்லாமல் கஷ்டப்பட்டுப் பரிசுத்த சதாசகாயமாதாவிடமும், அர்ச். அந்தோனியார், உத்தரிக்கிறஸ்தலத்து ஆத்துமாக்களிடமும் வேண்டி மன்றுடியபடி ஓர்உத்தியோகம் கிடைத்தது. மேலும், இலங்கையில் சமீபத்தில்நடந்த கலவரத்தின்போது நாங்கள்வசிக்கும் ஊரிலுள்ள கத்தோலிக்கமக்கள் ஒருவருக்கும் உயிர்ச்சேதம், பொருட்சேதம் இல்லாமல் காப்பாற்றியதற்கும் நன்றித்துதி செலுத்துகிறேன். எனது நேர்த்தியின்படி இதைப்பிரசுரஞ் செய்கிறேன். இவர்களின்நாமம் என்றென்றும் புகழப்படுவதாக.

அன்னையில் நம்பிக்கையுள்ள மகள்

● பிரித்தானிய விஞ்ஞானிகள் நெடுநாள்நடத்திய ஆராய்ச்சியின் விளைவாக "இயந்திரப் பசு" ஒன்றைக் கண்டுபிடித்திருப்பதாகச் சொல்லப்படுவதாய் லண்டனிலிருந்து சென்ற 10-ந்திகதி செய்திகிடைத்திருக்கிறது. போஷணைகுறைவாகவுள்ள கோடிக் கணக்கான ஆசியமக்களுக்குப் பிரித்தானியவிஞ்ஞானிகளின் இந்தச்சாதனை பெரிதும் பயன்படுமாம். புல், இலை, தழைமுதலியவற்றிலிருந்து மக்களுக்கு வேண்டிய போஷணைச்சத்துகளை இந்த இயந்திரப்பசு [illegible]

## Educational (Girls Only)

For Commercial Certificate and Shorthand Typists Examinations contact

M. M. Thuraisingham.
20, Third Cross Street,
Jaffna.

### கோட்டு விற்பனவு விளம்பரம்

இல. M. B. 1819

யாழ்ப்பாணம், ஸ்ரான்லிறேட்.
மல்சி சீவிய வீமாகம்பெனி
(The Malcey Life Assurance Co. Ltd.)
— வழக்காளி.

எதிராக
வண்ணுர்பண்ணை கிழக்கு
நன்னியர் மாரிமுத்து
— எதிராளி.

யாழ்ப்பாண டிஸ்திறிக்கோட்டின் M. B. 1819-ம்இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக்கட்டளைப்படி, பின்னுல் விபரிக்கப்படும் 2துண்டுக்காணிகளை 1958-ம் ஆண்டு புரட்டாதிமாதம் 18-ந்திகதி வியாழக்கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் அந்தந்தக் காணிக்குள்நின்று பிரசித்தஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை: முதல்வட்டி ரூபா 2,250/உம், 6-9-57தொடக்கம், 31-10-57 வரைக்கும் ரூபா 2,000-த்துக்குப் 12% வட்டியும், அதன்பின் முழுத்தொகைக்கும் இறுக்கும்வரை 5%வட்டியும், கோட்டுச்செலவு 195ரூபா 25சதமும். செலவில் 75 ரூபா ஓர்பகுதியாகக் கொடுபட்டது.

#### ஆதன விபரம்

1. வடமாகாணம், யாழ்ப்பாணடிஸ்திறிக் யாழ்ப்பாணப்பகுதி வண்ணுர்பண்ணை கோயிற்பற்று, வண்ணுர்பண்ணை வடகிழக்குஇறை "பூனைத்தூக்கிசெம்மண்கிடங்கடியும், நரியன்குன்றும்" பர. நில. இலா. பத்து. (ப. நி. இ. 10) இதில் வடக்குப் பக்கமாக பர. நில. இலா. நாலும், (ப. நி. இ. 4) செய்பயிர் வான்பயிர்களும், மற்றும் அதற்குச் சேர்ந்தவைகளும். எல்லை: கிழக்கு — ஐயம்பிள்ளை தம்பிராசா பெண் ராசம்மாவுடைய ஆதனமும், கீழ்சொல்லிய இரண்டாம்காணியும். வடக்கு — சின்னையா பெண் பூமணியுடைய ஆதனம். மேற்கு — கந்தசாமி பெண் தங்கம்மாவுடைய ஆதனம். தெற்கு — மாணிக்கம் முத்துவுக்குரிய இதன் மிகுதிஆதனம்.

2. ஷை இறை "பூனைத்தூக்கியும், மறுபிரிவுகளும்," குளி நாலு (குளி 4). எல்லை: கிழக்கு — றெயில்றேட்டு. வடக்கு — சின்னையா பெண் பூமணியுடைய ஆதனம். மேற்கு — மேற்சொல்லிய முதலாம் காணி. தெற்கு — ஐயம்பிள்ளை தம்பிராசா பெண் ராசம்மாவுடைய ஆதனம். இதடங்கலிற் சொரியலாய் நாலில் ஒரு பங்கு (¼பங்கு).

தி. ந. ஆசீர்வாதம்,
கொம்மிஷனரும், விலமதிப்பாளரும்
21, இரண்டாம் குறுக்குத்தெரு,
குருநகர், யாழ்ப்பாணம்.
8—8—58.

### கோட்டு விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாண டிஸ்திறிக்கோட்டில்
இல. M. B. 1811

மண்டைதீவு
மடுத்தீன் அந்தோனி பறுனுந்து
— வழக்காளி.

எதிராக
மண்டைதீவு
அந்தோனிப்பிள்ளை அந்திரேசுப்பிள்ளை
— எதிராளி.

யாழ்ப்பாண டிஸ்திறிக்கோட்டின் M. B. 1811-ம்இலக்கவழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக்கட்டளைப்படி, பின்னுல் விபரிக்கப்படும் ஓர்துண்டுக்காணி 1958-ம் ஆண்டு புரட்டாசிமாதம் 6-ந்திகதி (6-9-58) சனிக்கிழமை பிற்பகல் 4மணிதொடக்கம் அந்தக் காணிக்குள்நின்று பிரசித்தஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை: முதல்வட்டி ரூபா 1,621/83-உம், இன்னும் ரூபா 1,000-த்திற்கு 30-8-57 தொடக்கம், 20-2-58 வரையும் 100-க்குப் 12%வட்டியும், பின்பு கூட்டுத்தொகைக்கு இறுபடும்வரைக்கும் 100-க்கு 5%வட்டியும், கோட்டுச்செலவு 222 ரூபா 05சதமும்.

#### காணிவிபரம்

வடமாகாணம், யாழ்ப்பாணடிஸ்திறிக் தீவுப்பகுதி அல்லைப்பிட்டிக்கோயிற்பற்று மண்டைதீவு இறை, ஆனைபிடித்தானும், ஆனைவிழுந்தானும் ப. நி. இ. 8, குளி 7-ம். இதில் வடக்குப்புறமாகப் பிறிவிட்ட ப. நி. இ. 5, குளி 7-உம், வீடுகளும், கிணறும், பனைகளும், தென்னைகளும். இந்த வடக்குப்புறமாகப் பிறிவிட்ட ப. நி. இ. 5, குளி 7-உம், வீடுகளும், கிணறும், பனைகளும், தென்னைகளும், மற்றும் அதற்குச் சேர்ந்தவைகளுக்கும் எல்லை: கிழக்கு — கடற்கரை. வடக்கு — தேவசகாயம் சின்னப்புவின் உரிமைக்காரரின் ஆதனம். மேற்கு — அர்ச். பீற்றர் தேவாலயத்தினதும், (St. Peter's Church) மறுபேரினதும் ஆதனங்கள். தெற்கு — குழந்தை விஞசியின் ஆதனம். இதடங்கலும்.

தா. செல்லையா,
கொம்மிஷனரும், விலைமதிப்பாளரும்.
நம். 37, கொழும்புத்துறைவீதி,
சுண்டிக்குளி.
14-8 58

### நன்றியறிதல்

நான் கார்மேல்நாயகி கூட்டஅங்கத்தவன். எனக்குத்தற்போது வயது 72. எனது வாழ்க்கையில் எனதுபாதுகாவலராகக் கோடிஅற்புதரான அர்ச். அந்தோனியாரைப் பக்திபண்ணி வருகிறேன். அவர் அடியேனின் வேண்டுதலுக்குச் செவிசாய்த்து, பரமபிதாவிடம் பரிந்து பேசி என்னையும், மூன்றுபுதல்வரையும் காப்பாற்றிவருகிருர். சென்ற 10-ந்திகதி ஞாயிற்றுக்கிழமை அவர்செய்தருளிய புதுமையொன்றை இங்குகுறிப்பிட விரும்புகிறேன். அதாவது, அன்றுநான் அர்ச். அந்தோனியாரின் பக்தனென நன்கு அறிந்த பிறசமயவாதிகளான எனதுநண்பர்சிலர் என்னிடம்வந்து இன்று அடைமழையாக இருக்கின்றதே. எப்படி அர்ச். அந்தோனியாரின் சுற்றுப் பிரகாரம் நடைபெறப்போகின்றது பார்ப்போம். மழையை நிற்பாட்டினுல் அவர்புதுமையுள்ளவர்தான்என்று சபதம்போட்டனர். என்ன அதிசயம்! மழைஓய்ந்து சுற்றுப்பிரகாரம் நடந்தேறியது. அவரின்நாமம் புகழப்படுவதாக.

சந்தியோ ஆசீர்வாதம்,
கார்மேல்நாயகிகூட்ட அங்கத்தவன்,
நம். 31.

### நன்றியறிந்த தோத்திரம்

திருஇருதயநாதரின் இரக்கத்தாலும், பரிசுத்த சதாசகாயமாதாவினதும், அர்ச். அன்னம்மாளினதும் மன்றுட்டினுலும் எனதுபிரசவம் 9-7-58-ல் சுகமேநிறைவேறியதற்றாக நன்றிதெரிவித்து, நேர்த்தியின்படி பிரசுரிக்கிறேன். பிரசுரிக்கத் தாமதித்ததற்காக மன்னிப்புக்கோருகிறேன். மாதாவின் அடிமை.

வலித்தூண்டல்

Printed and Published for the Proprietor by NICHOLAS JAMES, residing at No. 20, Fifth Cross Street, Jaffna, at St. Joseph's Catholic Press, Catholic Mission Premises, Main Street, Jaffna, on Thursday, August 14-1958.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org